# அட்டை வாடிக்கையாளர் ஒப்பந்தம்

## விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

முக்கியம்: கம்பனி பதிவு இலக்கம் PB 4847 இனைக் கொண்ட கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட்டிடமிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டையில் நீங்கள் கையொப்பம் இட்டு அதனை உபயோகிக்க ஆரம்பிப்பதற்கு முன்பதாக, அட்டை வாடிக்கையாளர் ஒப்பந்தத்தை தயவு செய்து மிகவும் கவனமாக வாசிக்கவும். இந்த அட்டையை ஏற்றுக்கொள்வதால் மற்றும் /அல்லது கையொப்பம் இடுவதால் மற்றும்/அல்லது உபயோகிப்பதால் கீழே தரப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதுடன், அவற்றிற்கு கட்டுப்பட்டவர் ஆகின்றீர்கள்.

1 வரைவிலக்கணங்கள்

1.1 “ஏடிஎம்” என்பது வங்கிக்கு அல்லது சம்பந்தப்பட்ட வேறு எந்தவொரு வங்கிகளுக்கு அல்லது காலத்திற்கு காலம் வங்கியால் பிரேரிக்கப்பட்டு அட்டைகளை ஏற்றுக்கொள்கின்ற நிதி நிறுவனங்களுக்கு சொந்தமான தன்னியக்க டெலர் இயந்திரம் அல்லது அட்டையை இயக்கக்கூடிய எந்தவொரு இயந்திரம் அல்லது சாதனத்தைக் குறிக்கின்றது.

1.2 “விண்ணப்பதாரி” என்பது அட்டை விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்ட எந்தவொரு நபரையும் குறிக்கின்றது.

1.3 “வங்கி” என்பது கார்கில்ஸ் வங்கி லிமிட்டெட், அதன் வாரிசுகள் மற்றும் உரித்தாளர்களைக் குறிக்கின்றது.

1.4 “அட்டை” என்பது பிரதான, துணை மற்றும் மாற்று அட்டை(கள்) அடங்கலாக அட்டை வாடிக்கையாளருக்கு வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு அட்டையைக் குறிக்கின்றது.

1.5 “அட்டைக் கணக்கு” என்பது அட்டைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வங்கியால் பேணப்படுகின்ற கணக்கு(கள்) இனைக் குறிக்கின்றது.

1.6 “அட்டை மையம்” என்பது கார்கில்ஸ் வங்கி அட்டை மையத்தைக் குறிக்கின்றது.

1.7 "அட்டை வாடிக்கையாளர்" என்பது ஒப்பந்தத்திற்கு அமைவாக வங்கியால் அட்டை விநியோகிக்கப்பட்டவரின் பெயரைக் கொண்ட தனிநபரையும் மற்றும் அட்டைக் கணக்கு தொடர்பில் அனைத்து கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் பொறுப்புக்களுக்குப் பொறுப்பான பிரதான மற்றும் துணை அட்டை வாடிக்கையாளர்களை உள்ளடக்குகின்றது.

1.8 "அட்டை கொடுக்கல்வாங்கல்" என்பது அட்டை வாடிக்கையாளரின் அறிவுக்கு எட்டியோ அல்லது எட்டாமலோ அல்லது அவரின் அனுமதியின்றியோ, அல்லது சேவைகள்/உற்பத்திகள் தொடர்பான நிபந்தனைகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அட்டை வாடிக்கையாளரால் அஞ்சல், தொலைபேசி கோரல்கள், இணையம் உட்பட அனைத்து வழிகளிலும் அங்கீகரிக்கப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் (எந்தவொரு பொருட்கள், சேவைகள், மற்றும்/அல்லது சலுகைகள் மற்றும் எவ்விதமான நன்கொடை நோக்கத்திற்குமான கொடுப்பனவு மற்றும் எவ்விதமான முற்பணங்கள் அடங்கலாக) தொடர்பாக அட்டையை அல்லது அட்டைக் கணக்கினை அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளையும் குறிக்கின்றது.

1.9 "முற்பணம்" என்பது வங்கி அல்லது வேறு எந்தவொரு வங்கி அல்லது நிதி நிறுவனமொன்றிலிருந்து அட்டைக் கணக்கிற்கு பற்றுச் செய்யப்படுகின்றவாறு அட்டையை, அட்டை இலக்கத்தை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கத்தை உபயோகித்து வாடிக்கையாளரால் பணம் பெறப்படும் செயற்பாட்டினைக் குறிக்கின்றது.

1.10 "கட்டணங்கள்" என்பது அட்டை அல்லது அட்டை இலக்கம் அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தை உபயோகிப்பதால் ஏற்படுகின்ற அல்லது அனைத்து அட்டைக் கொடுக்கல்வாங்கல் கட்டணங்கள், வட்டி, வரிகள், விதிப்புக்கள், மேலதிக செலவுகள், சேதாரங்கள், சட்டச் செலவு, செலவுகள் அடங்கலாக அட்டைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு, தற்போதைய நிலுவையுடன் சேர்க்கப்படுகின்ற, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வாடிக்கையாளரால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து சென்மதி தொகைகளையும் குறிக்கின்றது.

1.11 "நிறுவன அட்டை" என்பது தகைமையுடைய நிறுவனமொன்றால் பணியாளர்கள், அதிகாரிகள், பணிப்பாளர்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள அட்டையை(களை) குறிக்கின்றது.

1.12 “கடன் எல்லை” என்பது பிரதான மற்றும் துணை அட்டை(கள்) தொடர்பான அட்டை கணக்கில் வங்கியால் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது காலத்திற்கு காலம் பிரதான அட்டை வாடிக்கையாளருக்கு வங்கியால் அறியத்தரப்படுகின்ற அதிகபட்ச பற்று மீதியைக் குறிக்கின்றது.

1.13 “தற்போதைய நிலுவை” என்பது வங்கியின் பதிவுகளுக்கு அமைவாக கணக்குகளின் கூற்றுக்கள் விநியோகிக்கப்படுகின்ற திகதியில் உள்ளவாறு வங்கிக்கு செலுத்த வேண்டிய, அட்டைக் கணக்கில் நிலுவையாக உள்ள பற்று மீதியை (அனைத்து அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள், வட்டி, கட்டணங்கள், செலவுகள், விதிப்புக்கள் மற்றும் தற்போது ஏற்பட்ட அல்லது எதிர்காலத்தில் ஏற்படவுள்ள உண்மையான அல்லது நேரிடக்கூடிய சட்டச் செலவுகள் அடங்கலாக அனைத்து செலவுகளும் உட்பட) குறிக்கின்றது.

1.14 “வைப்பு” என்பது அட்டை வாடிக்கையாளரின் கடப்பாட்டு செயல்பாடுகளுக்கான பாதுகாப்பாக மற்றும்/அல்லது அட்டையை(களை) விநியோகிக்கும் நோக்கத்திற்காக வங்கியில் பேணப்படுகின்ற பணத் தொகையைக் குறிக்கின்றது.

1.15 “குழும அங்கத்தவர்” என்பது வங்கியின் துணை நிறுவனத்தை அல்லது இணை நிறுவனமொன்றைக் குறிக்கின்றது.

1.16 “உத்தரவாதம்” என்பது அட்டை வாடிக்கையாளரின் கடப்பாட்டு செயல்பாடுகளுக்கான பாதுகாப்பாக மற்றும்/அல்லது அட்டையை(களை) விநியோகிக்கும் நோக்கத்திற்காக வங்கியால் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு, வங்கியிலிருந்து, வர்த்தக நிறுவனமொன்றிலிருந்து, ஸ்தாபனம் ஒன்றிலிருந்து, தனிநபர் ஒருவரிடமிருந்து அல்லது வேறு எந்தவொரு நிதி நிறுவனத்திடமிருந்து வங்கியின் பேரில் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வடிவம் மற்றும் பொருள் ஆகியவற்றைக் குறிக்கின்றது.

1.17 “விவரப் பொறிப்பு இயந்திரம்” என்பது அட்டைக் கொடுப்பனவுகளை கையால் இயக்கப்படும் நடைமுறை மூலமாக மேற்கொள்ள உதவுகின்ற சாதனமாகும்.

1.18 “ஊடாடும் குரல் பதில் அமைப்பு முறை” என்பது அட்டைக் கணக்கு மற்றும் சேவையின் உபயோகம் தொடர்பான விசாரணைகள் உட்பட அட்டை மூலமாக குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கல்

நடவடிக்கைகளை அட்டை வாடிக்கையாளர் முன்னெடுப்பதற்கான இலத்திரனியல் அடைவு வழிமுறையை வழங்கும் சாதனமாகும்.

1.19 "விற்பனையாளர்" என்பது அட்டை வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுக்காக அட்டையை அல்லது அட்டை இலக்கத்தை ஏற்றுக்கொண்டு பொருட்களை மற்றும்/அல்லது சேவைகளை விற்பனை செய்வதற்காக வங்கியால் அங்கீகரிக்கப்பட்டுள்ள எந்தவொரு வர்த்தக நிறுவனம், ஸ்தாபனம், நபர் அல்லது ஏனைய நிறுவனங்களைக் குறிக்கின்றது.

1.20 "செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகை" என்பது குறைந்தபட்ச தொகை மற்றும் எல்லை மீறிய தொகை (இருக்கும் பட்சத்தில்) ஆகியன அடங்கலாக, தாமதமான கொடுப்பனவுக் கட்டணங்களை தவிர்ப்பதற்கு கொடுப்பனவு செய்ய வேண்டிய திகதியில் செலுத்தப்பட வேண்டிய தற்போதைய நிலுவையின் குறிப்பிட்ட ஒரு சதவீதத்தைக் குறிப்பதுடன், செலுத்தவேண்டிய திகதியில் செலுத்தப்படாத எந்தவொரு தொகையும் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகைக்குள் உள்ளடக்கப்படும்.

1.21 "மாதம்" என்பது நாட்காட்டி மாதத்தைக் குறிக்கின்றது.

1.22 "நிலுவையாக உள்ள தொகை" என்பது அட்டை வாடிக்கையாளரின் முன்னைய கணக்கு கூற்றிலிருந்து நிலுவையாக உள்ள (இருக்கும் பட்சத்தில்) தொகையைக் குறிக்கின்றது. கணக்குக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற நிலுவையாக உள்ள தொகையும் எந்தவொரு தொகையும் செலுத்த வேண்டிய குறைந்தபட்ச தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், உடனடியாக செலுத்தப்படல் வேண்டும்.

1.23 "எல்லை மீறிய தொகை" என்பது கடன் எல்லையை மீறிய தற்போதைய நிலுவையாகும்.

1.24 "கடன் எல்லை மீறல் கட்டணம்" என்பது அட்டை வாடிக்கையாளர் ஒருவர் தனது கடன் எல்லையை மீறும் போது அவரது கணக்குக்கூற்று ஒன்றில் விதிக்கப்படும் கட்டணமாகும்.

1.25 "கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி" என்பது தற்போது நிலுவையாக உள்ள தொகையை அல்லது அதில் ஒரு பாகத்தினை அல்லது கொடுப்பனவு செய்யப்படவேண்டிய குறைந்தபட்ச தொகையை வங்கிக்கு செலுத்த வேண்டிய திகதி எதுவென கணக்குக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியாகும். கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியானது வங்கி விடுமுறை அல்லது வார இறுதி ஒன்றாக அமையும்

பட்சத்தில் அட்டை வாடிக்கையாளர் கொடுப்பனவை மேற்கொள்ள வேண்டிய திகதியானது அத்தகைய விடுமுறை/வார இறுதியை அடுத்து வருகின்ற முதலாவது பணி நாளாகும்.

1.26 "PIN" என்பது எந்தவொரு ஏடிஎம் மையங்களிலும் இலத்திரனியல்ரீதியாக உபயோகிக்கப்படுவதற்கு இடமளிக்கும் வகையில் அட்டை வாடிக்கையாளருக்கு (வாடிக்கையாளர்களுக்கு) விநியோகிக்கப்படுகின்ற தனிப்பட்ட அடையாள இலக்கமாகும்.

1.27 "POS" என்பது அட்டை மூலமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை இலத்திரனியல்ரீதியாக நடைமுறைப்படுத்தக்கூடிய விற்பனை மைய முனையமாகும்.

1.28 "பிரதான அட்டை வாடிக்கையாளர்" எனப்படுவது துணை அட்டை வாடிக்கையாளர் அல்லாத, முதன்முதலில் அட்டை கணக்கினை வங்கியில் ஆரம்பித்து அதனைப் பேணுகின்ற நபரைக் குறிக்கின்றது.

1.29 "ரூபா" அல்லது "இலங்கை ரூபா" என்பது இலங்கை ரூபா நாணயத்தைக் குறிக்கின்றது.

1.30 "உத்தரவாதம்" என்பது அட்டை வாடிக்கையாளர்களின் கடப்பாடுகளின் செயற்பாட்டிற்காக மற்றும்/அல்லது அட்டையை(களை) விநியோகிக்கும் தேவைப்பாட்டிற்காக உத்தரவாதமாக கொள்ளப்படுகின்ற வைப்பு அல்லது உத்தரவாதத்தைக் குறிக்கின்றது.

1.31 "கணக்குகளின் கூற்று" என்பது ஒவ்வொரு அட்டைக் கணக்கிலும் தற்போது வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவை மற்றும் அவற்றின் விபரங்களைக் காண்பிக்கும் வகையில் அட்டை வாடிக்கையாளருக்கு மாதந்தோறும் அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு தடவை வங்கியினால் அனுப்பி வைக்கப்படுகின்ற கூற்றாகும்.

1.32 "கூற்று திகதி" எனப்படுவது கணக்கின் கூற்று குறிப்பிடுகின்ற கட்டணப் பட்டியல் சக்கரத்தின் இறுதித் தினத்தைக் குறிப்பிடுவதுடன், அத்தகைய திகதியில் வியாபார நடவடிக்கைகளை நிறைவு செய்யும் தருணத்தில் வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து நடவடிக்கை பதிவுகளையும் உள்ளடக்கியுள்ளது.

1.33 "துணை அட்டை" எனப்படுவது, வங்கியுடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்கின்ற பிரதான அட்டை வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில், பிரேரிக்கப்படுகின்ற மூன்றாம் தரப்பிற்கு வங்கியினால் விநியோகிக்கப்படுகின்ற அட்டையைக் குறிக்கின்றது.

1.34 “துணை அட்டை வாடிக்கையாளர்” எனப்படுவது துணை அட்டை விநியோகிக்கப்பட்டுள்ள நபரைக் குறிக்கின்றது.

1.35 “முனையம்” எனப்படுவது இலத்திரனியல்ரீதியாக அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய எந்தவொரு தன்னியக்க டெலர் இயந்திரத்தையும் (ஏடிஎம்) அல்லது விற்பனை மைய முனையத்தையும் குறிக்கும்.

1.36 “கொடுக்கல்வாங்கல் திகதி” எனப்படுவது அட்டை வாடிக்கையாளருக்கும், விற்பனையாளருக்கும் இடையில் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை இடம்பெற்ற திகதியைக் குறிக்கின்றது.

1.37 “கொடுக்கல்வாங்கல் நடைமுறைப்படுத்தல் (ஒப்புதல்) திகதி” எனப்படுவது அட்டை மூலமாக இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல் அட்டை கணக்கில் நடைமுறைப்படுத்தப்படும் திகதியைக் குறிக்கின்றது.

1.38 “பாவனை” எனப்படுவது தண்ணீர், மின்சாரம் மற்றும் தொடர்பாடல் சேவைகள் அடங்கலாக பாவனைகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் எந்தவொரு நிறுவனம், அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஸ்தாபனத்தைக் குறிக்கின்றது.

1.39 “கூட்டு கடன் எல்லை” எனப்படுவது அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள அனைத்து அட்டை கணக்குகளுக்கும் பொருந்துகின்றவாறு வங்கியால் காலத்திற்கு காலம் அறிவிக்கப்படுகின்ற கடன் வரம்பினைக் குறிக்கின்றது.

குறிப்பிட்டாலன்றி, மேற்குறிப்பிட்ட அனைத்தும் ஆண் மற்றும் பெண் என அனைத்து பாலாருக்கும் பொதுவானவையாகும்.

## 2 அட்டை

2.1. அட்டையானது வங்கியின் உடமையாக உள்ளதுடன், வங்கியின் வேண்டுகோளுக்கு அமைவாக, அட்டை வாடிக்கையாளர் அதனை உடனடியாக வங்கியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்.

2.2. அட்டையானது கைமாற்றம் செய்யத் தகாததாக உள்ளதுடன், அட்டை வாடிக்கையாளரின் தனிப்பட்ட பாவனைக்கு மட்டும் உரியது. வேறு நபர் ஒருவர் அட்டையை மற்றும்/அல்லது தனிப்பட்ட அடையாள இலக்கத்தை உபயோகிப்பதற்கு எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் வாடிக்கையாளர் இடமளித்தல் கூடாது. அட்டை வாடிக்கையாளர்

எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் அட்டையை பிணை நோக்கத்திற்காக உபயோகிக்கக்கூடாது.

2.3. வங்கி முற்றிலும் தனது தீர்மானத்திற்கு அமைவாக, எவ்விதமான முன்னறிவித்தலுமின்றியும், எவ்விதமான காரணத்தைக் குறிப்பிடாமலும், எந்நேரமும் அட்டையையும், அட்டையை உபயோகிக்கும் அட்டை வாடிக்கையாளரின் உரிமையையும் அது மீளப் பெறலாம், அத்துடன் எவ்விதமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்குமான அங்கீகார கோரிக்கைக்கான அனுமதிக்கு மறுப்பு தெரிவிக்கலாம்.

2.4. வங்கி முற்றிலும் தனது தீர்மானத்திற்கு அமைவாக அட்டையை மீள விநியோகிக்கலாம், புதுப்பிக்கலாம் அல்லது மாற்று அட்டையை விநியோகிக்கலாம் அல்லது அவ்வாறு செய்வதற்கு மறுப்பு தெரிவிக்கலாம்.

2.5. அட்டையை எப்போதும் பாதுகாப்பாக வைத்துப் பேணுவதை அட்டை வாடிக்கையாளர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

3 அட்டை விநியோகம் மற்றும் பாவனை

3.1. அட்டை வாடிக்கையாளர் அட்டையை நேரில் சென்று பெற்றுக்கொள்ள முடியும் அல்லது அட்டை வாடிக்கையாளரால் வங்கியிடம் தெரிவிக்கப்பட்டுள்ள முகவரிக்கு தபால் அல்லது விநியோக ஏற்பாட்டுச் சேவை மூலமாக அனுப்பி வைக்கப்படும் அல்லது அட்டை வாடிக்கையாளர் எவ்விதமான ஆபத்தையும் பொறுப்பேற்று தன்னால் நியமிக்கப்படும் மூன்றாம் தரப்பினரை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்/அல்லது அவரிடம் கையளிக்கப்படும்.

3.2. அட்டை கிடைக்கப்பெற்றவுடன், அட்டையின் பின்புறத்தில் அட்டை வாடிக்கையாளர் தனது கையொப்பத்தை இட்டுக்கொள்ள வேண்டும். அத்துடன் அத்தகைய கையொப்பம் மற்றும்/அல்லது அட்டையை செயலாக்கம் செய்த பின் மற்றும்/அல்லது அட்டையின் பாவனையானது இதில் உள்ளடங்கியுள்ள நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை ஏற்றுக்கொண்டுள்ளதாக கருதப்படுவதுடன், அதற்கான ஆதாரமாகவும் அமையும்.

3.3. இந்த நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்கு அட்டை வாடிக்கையாளர் கட்டுப்பட விரும்பாத பட்சத்தில், அவர் அட்டையை இரண்டாக வெட்டி, இரு பாகங்களையும் வங்கியில் ஒப்படைப்பதுடன், அதனைத் தொடர்ந்து சரத்து 19 (முடிவுறுத்தல்) அமுலுக்கு வரும்.

3.4. இந்த அட்டை பாவனையில் உள்ள போது இவ்வொப்பந்தத்தின் அனைத்து விதிமுறைகளுக்கும் உட்பட்டது.

3.5. கடன் எல்லைக்கு உட்பட்டதாகவே அட்டையை உபயோகித்தல் வேண்டும்.

3.6. அட்டையின் பாவனை தொடர்பில் வங்கியிடமிருந்து காலத்திற்கு காலம் கிடைக்கின்ற வசதிகள் மற்றும் சலுகைகளை அட்டை வாடிக்கையாளர் உபயோகிக்க முடியும்.

3.7. அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள செல்லுபடி காலத்தின் போது வங்கியானது தனது தற்துணிபின் பிரகாரம், எவ்விதமான அறிவித்தலுமின்றி, எந்நேரமும் அட்டையை உபயோகிக்கும் உரிமையை மீளப்பெற முடியும் அல்லது அட்டை கொடுக்கல் வாங்கல் தொடர்பான அனுமதிக்கோரலையும் மறுக்க முடியும் அல்லது அத்தகைய மீளப்பெறுதல் அல்லது மறுப்பினை வெளியிட முடியும்.

3.8. குறித்த அட்டையானது உண்மையாகவும், தனிப்பட்ட அல்லது உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தலாம் மற்றும் அதன் பயன்பாடானது வர்த்தக நிறுவனங்களுக்கான பொருட்கள் கொள்வனவு,இறக்குமதி அல்லது மூலதன பரிமாற்றல்கள் ஆகியவற்றை மேற்கொள்வதற்காக அனுமதிக்கப்படவில்லை. இந்த அட்டையினை எந்தவொரு சட்ட விரோதமான அல்லது சட்டத்திற்கு முரணான நோக்கத்திற்காக பயன்படுத்தலாகாது. அட்டை கணக்கின் செலுத்த வேண்டிய தொகை அதிகரித்திருத்தல் அல்லது சந்தேகத்துக்கிடமான நடவடிக்கையாக கருதப்படுமிடத்து, ஏதேனும் அல்லது அனைத்து அட்டை பரிமாற்றல்களையும் முடக்குவதற்கான உரிமையை வங்கி கொண்டுள்ளது.

3.9. இலங்கைக்கு வெளியில் இந்த அட்டையை உபயோகிப்பது தொடர்பான கட்டுப்பாடுகள் இலங்கை மத்திய வங்கி, அந்நிய செலாவணி திணைக்களம் அல்லது வேறு எந்தவொரு அதிகார சபையாலும் காலத்திற்கு காலம் விதிக்கப்படலாம். இலங்கை மத்திய வங்கியால், வங்கியால், நீதிமன்றத்தால் அல்லது வேறு எந்தவொரு அதிகார சபையாலும் அட்டை வாடிக்கையாளருக்கு எதிராக முன்னெடுக்கப்படுகின்ற எந்தவொரு நடவடிக்கைக்கும் அவர் கட்டுப்பட வேண்டியதுடன், நிலுவையாக உள்ள தொகையை முழுமையாக செலுத்தும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3.10. அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள காலாவதியாகும் திகதி வரையில், அட்டைக் கணக்கின் அந்தஸ்து தொடர்ந்தும் தற்போதைய நிலைமையின் கீழ் உபயோகிக்கப்பட முடியும்.

3.11. அட்டை மற்றும் வங்கியுடனான அனைத்து செயற்பாடுகளின் போதும் எப்போதும் நேர் வழியில் செயற்படும் பொறுப்பினை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

4 கடன் எல்லை மற்றும் கூட்டுக் கடன் எல்லை

4.1. (அ) அட்டைக் கணக்கிற்கான கடன் வரம்பினை வங்கி ஒதுக்குவதுடன், அதனை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். எனினும் அட்டை வாடிக்கையாளர் விரும்பினால் எந்நேரமும் தனது கடன் வரம்பினை மீளாய்வு செய்யுமாறு கோரி அதற்கு விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கடன் வரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிப்பதற்கு, அட்டைக் கணக்கில் இன்னமும் பற்று வைக்கப்படாத எந்தவொரு அட்டைக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொகை மற்றும் அட்டைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் மூன்றாம் தரப்பிற்கு வங்கியால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு அனுமதி அல்லது அட்டை வாடிக்கையாளரின் கோரிக்கைக்கு அமைவாக இடம்பெறவுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பில் வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ள எந்தவொரு தொகை அடங்லாக தற்போதைய நிலுவை ஆகியவற்றை வங்கி கருத்தில் கொள்ளும்.

4.2. இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலும் கூட அட்டை தொடர்பில் வங்கியால் வழங்கப்பட்டுள்ள அனைத்து கடன் வசதிகள் மற்றும் இதன் கீழான தொடர்புபட்ட அனைத்து கட்டணங்களுக்கும் அட்டை வாடிக்கையாளர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

4.3. அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள அனைத்து அட்டைக் கணக்குகளினதும் அனுமதிக்கப்பட்ட தற்போதைய நிலுவையின் அதிகபட்ச தொகையாக கூட்டு கடன் வரம்பு அமையப்பெறுவதுடன், காலத்திற்கு காலம் அது தொடர்பில் வங்கியால் அறியத்தரப்படும்.

4.4. உங்களுடைய அட்டைக் கணக்கு (கள்) மற்றும் / அல்லது இந்த ஒப்பந்தத்துடன் தொடர்புபட்டு, எந்நேரத்திலும் உங்களது மொத்த நிலுவையாக எமக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையை தற்போதைய நிலுவை குறிக்கின்றது.

4.5. எவ்வேளையிலும் அட்டை வாடிக்கையாளருக்கு உரிய கூட்டு கடன் வரம்பினை தற்போதைய நிலுவை மீறும் வகையில் அட்டை

வாடிக்கையாளர் அட்டையை/களை உபயோகித்தல் கூடாது. கூட்டு கடன் வரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும் போது அட்டை வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆனால் இன்னமும் அட்டைக் கணக்கில் பற்றுச் செய்யப்படாத எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை அல்லது அட்டைக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் மூன்றாம் தரப்பிற்கு வங்கியால் வழங்கப்பட்டுள்ள எந்தவொரு அனுமதி அல்லது வாடிக்கையாளரின் கோரிக்கைக்கு அமைவாக இடம்பெறவுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பில் வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ள எந்தவொரு தொகை அடங்கலாக தற்போதைய நிலுவை ஆகியவற்றை வங்கி கருத்தில் கொள்ளும்.

4.6. எமது சம்மதத்துடனோ அல்லது சம்மதம் இன்றியோ, கூட்டு கடன் வரம்பினை மீறும் வகையில் நீங்கள் எந்தவொரு அட்டைக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கையையும் மேற்கொண்டால், கூட்டு கடன் வரம்பினை மீறும் தொகையை நீங்கள் உடனடியாக எமக்கு செலுத்துதல் வேண்டும். எமது தற்துணிபின் பிரகாரம் நாம் அத்தகைய கணக்கின் கொடுப்பனவை செலுத்துமாறு உங்களை அறிவுறுத்தலாம் மற்றும் எது பொருத்தமானது என நாம் கருதுகின்ற வழிமுறைகள் மூலம் அது தொடர்பில் உங்களுக்கு அறியத்தரலாம். அட்டை வாடிக்கையாளர் இதற்கு கட்டுப்படத் தவறும் பட்சத்தில், எமது உரிமைகள் அல்லது பரிகாரங்கள் தொடர்பான எவ்விதமான பாரபட்சமுமின்றி உங்களது அட்டைக் கணக்கினை முடிவுறுத்தும் பூரண உரிமையை நாம் கொண்டுள்ளோம்.

5. கடன் வரம்பு

5.1. கடன் வரம்பு வங்கியின் ஏகபோக தீர்மானத்திற்கு அமைவாக நிர்ணயிக்கப்படுவதுடன், அது தொடர்பில் அட்டை வாடிக்கையாளருக்கு எழுத்து மூலமாக அறியத் தரப்படும். எழுத்து மூலமான அறிவித்தலை வழங்கி எந்நேரமும் கடன் வரம்பினை அதிகரிக்கும் அல்லது குறைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. உங்களுடைய அட்டைக் கணக்கின் ஒட்டுமொத்த கடன் வரம்பின் கீழ் பணம் மற்றும் பணம்-அல்லாத கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு வெவ்வேறு உச்ச வரம்பினை வங்கி நிர்ணயிக்கலாம்.

5.2. அட்டை கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வங்கியால் ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஆனால் குறிப்பிட்ட திகதி வரையில் இன்னமும் செயலாக்கத்திற்கு பெற்றுக்கொள்ளப்படாத நடவடிக்கைகள் தொடர்பான நிலுவையை கணக்கில் எடுத்து, கடன் வரம்பிற்கு அமைவாக குறிப்பிட்ட திகதியில் உள்ள பயன்படுத்தப்படாத தொகையே உங்களது அட்டைக் கணக்கில் கிடைக்கப்பெறும் கடன் தொகையாக

கருதப்படுகின்றது. பணம் மற்றும் பணம்-அல்லாத கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு வெவ்வேறாக உச்ச வரம்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், கிடைக்கப்பெறும் கடன் தொகை அதற்கமைவாக வெவ்வேறாக அமையும். உங்களுடைய கணக்கில் கிடைக்கப்பெறுகின்ற கடன் தொகைக்கு (பணம் மற்றும் பணம்-அல்லாத நடவடிக்கை வரம்புகளுக்கு அமைவாக) உட்பட்டு எப்போதும் செயற்படும் வகையில் உங்களுடைய அட்டைக் கணக்கின் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை உறுதி செய்யும் பொறுப்பு உங்களுடையதாகும்.

5.3. அட்டை வாடிக்கையாளரின் அட்டைக் கணக்கிலுள்ள கடன் வரம்பினை மீறுவது இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும் செயற்பாடாக கருதப்படுவதுடன், வங்கி தனது முழுமையான தற்துணிபின் பிரகாரம் முன்னறிவித்தலின்றி அட்டைக் கணக்கினை இரத்துச் செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது.

6. பட்டியல் நடைமுறை மற்றும் கொடுப்பனவு

6.1. அட்டை கொடுக்கல்வாங்கல் தொடர்பான எந்தவொரு மீளளிப்பு அல்லது எந்தவொரு கொடுப்பனவு அல்லது உங்களுக்கு வரவேண்டிய தொகையை உங்களது அட்டைக் கணக்கில் வரவு வைக்கும் போது இலங்கையில் அத்தகைய மீளளிப்பு, கொடுப்பனவு அல்லது வரவுத் தொகையை பெற்ற பின்னர் அல்லது இலங்கை ரூபாவிற்கு மாற்றம் செய்த பின்னர் எமது வழமையான நடைமுறைகளின் கீழ் எமது தீர்மானங்களுக்கு அமைவாகவே அவை வரவு வைக்கப்படுவதுடன், இந்த ஒப்பந்தத்தின் கீழான விதிமுறைகள் பின்பற்றப்படுவதுடன், உங்களுக்கு அது அனுப்பி வைக்கப்படாது உங்களுடைய தற்போதைய நிலுவையை முழுமையாக அல்லது பகுதியளவில் தீர்க்கும் வகையில் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை நாம் கொண்டுள்ளோம்.

6.2. விமானப் பயணச்சீட்டுக்களின் கொள்வனவு மற்றும் மீளளிப்பு ஆகிய இரு வேறான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளாக அமையப்பெறுவதால், பட்டியல் தொகைக்கு அமைவாக விமானப் பயணச்சீட்டுக் கொள்வனவுத் தொகையை அட்டை வாடிக்கையாளர் செலுத்துதல் வேண்டும். கொள்வனவு செய்த பின்னர் இரத்துச் செய்யப்படும் எந்தவொரு விமான பயணச் சீட்டிற்கும் முதலில் கொடுப்பனவு செய்த தரப்பினரிடமிருந்து மீளளிப்பு தொகை பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே (இரத்துச் செய்தமைக்கான கட்டணங்களை கழித்த பின்னர்) அத்தொகை அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

6.3. மீளளிப்புக்கள் அல்லது பிணக்கிலுள்ள கொடுக்கல்வாங்கல் தொடர்பான தள்ளுபடி செய்தல் அடங்கலாக இரத்துச் செய்தல், தள்ளுபடி செய்தல் அல்லது மீளளிப்பு காரணமாக ஏற்படுகின்ற எந்தவொரு அந்நிய செலாவணி இழப்பிற்கும் அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

6.4. உங்களுடைய மாதாந்த கணக்குக் கூற்றுக்களை உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு நீங்கள் விடுத்துள்ள கோரிக்கையை வங்கி கருத்தில் கொண்டு, ஏற்றுக்கொள்ளும் அதேசமயம், இலத்திரனியல் கூற்று வழங்கல் சேவை அல்லது வங்கியால் வேறு எந்தவொரு வழிமுறையாலும் அனுப்பி வைக்கப்படுகின்ற கணக்குக் கூற்றினை சரியானதென்றும், அங்கீகாரம் கொண்டதென்றும் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். வங்கிக்கு எதிராக எவ்விதமான ஆட்சேபனையையும் நீங்கள் எழுப்ப மாட்டீர்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வதுடன், இலத்திரனியல் அஞ்சல் முறையில் வங்கியால் அனுப்பி வைக்கப்படுகின்ற கூற்றுக்கள் தொடர்பாக எழுகின்ற ஆபத்து மற்றும் பொறுப்பை நீங்கள் முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றீர்கள். இணையத்தின் மூலமாக அனுப்பி வைக்கும் போது மின்னஞ்சல்களின் அந்தரங்கம் மற்றும்/அல்லது பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கின்ற எந்தவொரு வெளிப்புறக் காரணிகளுக்கும் எதிரான உத்தரவாதத்தை வங்கி உங்களுக்கு வழங்காது என்பதையும் நீங்கள் ஒப்புக்கொண்டு, ஏற்றுக்கொள்கின்றீர்கள். உங்களுடைய கோரிக்கை ஏற்று மின்னஞ்சல் ஊடாக வங்கியானது கணக்கு கூற்றுக்களையும் மற்றும் தகவல் விபரங்களையும் அனுப்பி வைக்கும் சமயத்தில் எழக்கூடிய எவ்விதமான விளைவுகள் தொடர்பாகவும் அதற்கு எதிரான எவ்விதமான நடவடிக்கைகள், வழக்குகள், பொறுப்புக்கள் மற்றும் இழப்பீட்டுக் கோரல்கள், சட்ட நடவடிக்கைகள், சேதாரங்கள், செலவுகள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் வங்கிக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டீர்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். வங்கியால் விதிக்கப்படுகின்றவாறு சேவை தொடர்பில் காலத்திற்கு காலம் வங்கியால் அமுல்படுத்தப்படும் அனைத்து கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை செலுத்துவதையும் நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். உங்களுக்கு எவ்விதமான அறிவித்தலையும் வழங்காது, காலத்திற்கு காலம் எவ்விதமான சேவைகளையும் சேர்க்கின்ற, நிறுத்துகின்ற அல்லது மாற்றம் செய்கின்ற உரிமையை வங்கி கொண்டுள்ளதாக நீங்கள் ஒப்புதல் அளிக்கின்றீர்கள். உங்களுடைய மின்னஞ்சல் முகவரியில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மற்றும் இவ்வசதியை தொடர்ந்தும் பெற்றுக்கொள்ள விரும்பாத பட்சத்தில் முகாமையாளர், அட்டைத் தொழிற்பாடுகள், 01 ஆவது மாடி, மெயிட்லான்ட் கிரெசன்ட், கொழும்பு 07 என்ற முகவரியிலுள்ள வங்கியின் அட்டை மையத்திற்கு எழுத்து

மூலமாக அறியத்தருவதாக நீங்கள் உத்தரவாதம் அளிக்கின்றீர்கள். தரவு சீர்கேடு, தாமதம் மற்றும்/அல்லது தகவல் விபரங்களின் குறுக்கீடுகள் தொடர்பில் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ளாது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வதுடன், காலத்திற்கு காலம் எந்நேரமும் அத்தகைய தகவல் விபரங்களில் புதுப்பித்தல்களை மேற்கொண்டு மற்றும் மாற்றங்களை மேற்கொள்ளும் உரிமையை வங்கி கொண்டுள்ளது. உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் ஊடாக விளம்பர மற்றும் ஊக்குவிப்பு சம்பந்தமான விடயங்களை வங்கி உங்களுக்கு அனுப்புவதற்கும் நீங்கள் அங்கீகாரம் அளிப்பதாக இத்தால் ஏற்றுக்கொள்கின்றீர்கள்.

6.5. வெளிநாட்டு நாணங்களை இலங்கை ரூபாவிற்கு மாற்றுதல் அல்லது இலங்கை ரூபாவினை வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல் என அந்நிய செலாவணி மாற்று வீதத்தை அல்லது மீள் மாற்று வீதத்தை வங்கி விதிப்பது இறுதியானதும், முடிவானதும் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். கொடுப்பனவை எவ்விதமான வெளிநாட்டு நாணயத்திலும், வெளிநாட்டு நாணயக் கணக்கிலும் மேற்கொண்டாலும், அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை ரூபாவாகவே அமையப் பெறும்.

6.6. அனைத்து நாணய மாற்றங்கள் மற்றும் மீள்மாற்றங்கள் வங்கிக்கு நாணய மாற்று இழப்பு ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்படுவதுடன், நாணய மாற்று தொடர்பில் ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பில் வங்கிக்கு எதிராக எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்க மாட்டேன் என்பதை அட்டை வாடிக்கையாளர் இத்தால் ஒப்புதல் அளிக்கின்றார். நாணயங்களின் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புபட்ட தரப்பினரிடையே எவ்விதமான நாணய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக அல்லது தொடர்புபட்ட நாணயம்/நாணயங்களின் மதிப்பிறக்கம் தொடர்பாக வங்கிக்கு, அல்லது அதன் முகவர்களுக்கு அல்லது பிரதிநிதிகளுக்கு ஏற்படுகின்ற எவ்விதமான இழப்பும் நாணய மாற்று இழப்பாக கருதப்படுகின்றது.

6.7. அட்டை வாடிக்கையாளருக்கு மரணம் நிகழுகின்ற போது அவரது பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், சட்ட பிரதிநிதிகள் அல்லது அட்டை வாடிக்கையாளரின் சொத்துக்களுக்கு வாரிசுகளான உறவினர்கள் அட்டைக் கணக்கில் நிலுவையாக உள்ள தொகையை தீர்க்கும் பொறுப்பைக் கொண்டிருப்பர் என்பதை அட்டை வாடிக்கையாளர் இத்தால் ஏற்றுக்கொள்கின்றார்.

7. தனிப்பட்ட அடையாள இலக்க விநியோகம் மற்றும் அட்டை மற்றும் தனிப்பட்ட அடையாள இலக்கம் தொலைந்து போதல்

7.1. அட்டையையும், அட்டை வாடிக்கையாளரையும் ஏற்றுக்கொண்டு, எந்தவொரு ஏடிஎம் மையத்திலும் உபயோகிப்பதற்காக அட்டை வாடிக்கையாளருக்கு தனிப்பட்ட அடையாள இலக்கமொன்றை வங்கி விநியோகிப்பதுடன், தபால் அல்லது விநியோக சேவை மூலமாக தனிப்பட்ட அடையாள இலக்கத்தை அனுப்பி வைக்கும் போது ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்கும் தானே பொறுப்பு என்பதையும் அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

7.2. தனிப்பட்ட அடையாள இலக்கத்தை உபயோகித்து மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கும் அட்டை வாடிக்கையாளரே முற்றாக பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

7.3. அட்டை மற்றும் தனிப்பட்ட அடையாள இலக்கம் தொலைந்து போவதை அல்லது திருட்டுப் போவதை தடுக்கும் வகையில் தனிப்பட்ட அடையாள இலக்கம் மற்றும் அட்டையை பாதுகாப்பாக பேணுவதை உறுதி செய்யும் வகையில் சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் அட்டை வாடிக்கையாளர் மேற்கொள்ள வேண்டும்.

7.4. அட்டை தொலைந்து போகும் அல்லது களவாடப்படும் சந்தர்ப்பத்தில் அது தொடர்பில் தொலைபேசி, தொலைநகல் அல்லது உரிய கொடுப்பனவு தொடர்பான வங்கியின் எந்தவொரு உறுப்பினருக்கும் அல்லது அதன் பிரதிநிதி அலுவலகத்திற்கு அல்லது தொலைந்து போன அல்லது களவாடப்பட்ட நாட்டின் காவல்துறைக்கு விபரங்களுடன் உடனடியாக முறைப்பாட்டினை மேற்கொண்டு அறிவித்தல் வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தொலைபேசி அல்லது தொலைநகல் வாயிலான செய்திகள் கிடைக்கப்பெற்றமை எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்படுவதாக அமைதல் வேண்டும்.

7.5. அட்டை தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட பின்னர் அது தொடர்பில் வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டு, வங்கியால் அது உறுதிப்படுத்தப்படும் வரை அட்டையின் அங்கீகார அனுமதியின்றி பாவனையால் அட்டைக் கணக்கிற்கு பற்றுச் செய்யப்படுகின்ற அனைத்து தொகைகளுக்கும் அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

7.6. அட்டை தொலைந்துபோனமை அல்லது களவாடப்பட்டமை அல்லது அங்கீகாரமற்ற பாவனை தொடர்பான சூழ்நிலைகளின் போது தொலைந்துபோன/களவாடப்பட்ட அட்டையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை வங்கி முன்னெடுப்பதற்கு உதவும் வகையில் தான் அறிந்துள்ள அனைத்து

தகவல் விபரங்களையும் அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

7.7. பொருத்தமானது என வங்கி கருதும் பட்சத்தில் இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட எந்தவொரு அட்டைக்கும் பதிலாக மாற்று அட்டையொன்றை அல்லது புதிய தனிப்பட்ட அடையாள இலக்கமொன்றை விநியோகிக்கும் செயற்பாடு முற்றிலும் வங்கியின் தீர்மானத்திற்கு உட்பட்டது.

7.8. தொலைந்துபோன அல்லது களவாடப்பட்ட அட்டையானது அட்டை வாடிக்கையாளருக்கு மீளவும் கிடைக்கப்பெறுகின்ற சமயத்தில், அதனை உபயோகிக்காது இரண்டு துண்டுகளாக வெட்டி வங்கியிடம் உடனடியாக ஒப்படைத்தல் வேண்டும். வங்கியில் முறையிட்ட பின்னர் தனிப்பட்ட அடையாள இலக்கத்தினை அட்டை வாடிக்கையாளர் உபயோகித்தல் ஆகாது.

7.9. தொலைந்துபோன அட்டைகள் தொடர்பில் விற்பனை வலையமைப்பிற்கு அறிவித்து, புதிய அட்டையை விநியோகிப்பதற்கு நிர்வாகச் செலவை ஈடுசெய்யும் வகையில் வங்கி கட்டணமொன்றை அறவிடும்.

8. அட்டைக் கணக்கு

8.1. அட்டையின் பாவனை காரணமாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் தொகைகள், வங்கிக்கு செலுத்த வேண்டிய எவ்விதமான கட்டணங்கள் மற்றும் வங்கிக்கு நேருகின்ற எவ்விதமான சட்டச் செலவுகள் மற்றும் ஏனைய அனைத்து நிர்வாகச் செலவுகள் அடங்கலாக அட்டை வாடிக்கையாளரின் ஏனைய பொறுப்புக்கள் மற்றும் வங்கிக்கு நேருகின்ற ஏனைய எவ்விதமான இழப்புக்களும் அட்டைக் கணக்கில் வங்கியால் பற்றுச் செய்யப்படும். விற்பனை அல்லது முற்பண வவுச்சர் என அட்டை வாடிக்கையாளரின் கையொப்பத்துடன் அல்லது கையொப்பம் இன்றி பற்றுச் செய்யப்படுகின்ற அனைத்து தொகைகளையும் வங்கிக்கு செலுத்தும் பொறுப்பினை பிரதான அட்டை வாடிக்கையாளரும், துணை அட்டை வாடிக்கையாளரும் கூட்டாக மற்றும் தனித்தனியாக பொறுப்பேற்றுக் கொள்கின்றனர்.

8.2. கணக்குக்கூற்றினை வங்கி அட்டை வாடிக்கையாளருக்கு அனுப்பி வைப்பதுடன், “கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய திகதி” என குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் அல்லது அதற்கு முன்பதாக “குறைந்த பட்ச கொடுப்பனவுத் தொகை” எனக் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையாவது வங்கிக்கு அட்டை வாடிக்கையாளர் செலுத்துதல்

வேண்டும். எனினும் அவர் தனது விருப்பத்திற்கேற்ப நிலுவையாக உள்ள முழுத் தொகையை அல்லது குறைந்த பட்ச கொடுப்பனவுத் தொகைக்கு மேற்பட்ட எந்தவொரு தொகையையும் செலுத்த முடியும். கொடுப்பனவு செலுத்தப்படவேண்டிய கடைசித் திகதி வங்கி அலுவலக தினம் அல்லாத ஒரு தினமாக அமையும் பட்சத்தில், அதற்கு அடுத்த வங்கி அலுவலக தினத்தில் கொடுப்பனவைச் செலுத்த முடியும்.

8.3. இந்த ஒப்பந்தத்தை மீறும் பட்சத்தில் அல்லது அட்டை வாடிக்கையாளரால் கடனைச் செலுத்த முடியாது திவாலாகும் பட்சத்தில் அல்லது பிரதான வாடிக்கையாளர் மரணிக்கும் பட்சத்தில் அல்லது வங்கியின் முழுமையான தற்துணிபின் பிரகாரம் இந்த ஒப்பந்தத்தின் கீழான மொத்த தொகையும் எந்தவொரு சாசனத்தின் பிரகாரம் அமுலாக்கம் செய்யப்படும் வகையில் உடனடியாக செலுத்தப்படல் வேண்டும்.

8.4. வங்கியில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுப்பனவும் வங்கியால் குறிப்பிடப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளப்பட்டு, அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்னரே செல்லுபடியாகும். இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வாடிக்கையாளரின் கடப்பாடுகளுக்கு அமைவாக, வங்கிக்கு காசோலை ஒன்றை வழங்கும் போது தேவையான நிதி கணக்கில் இருப்பதை பிரதான அட்டை வாடிக்கையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

9. முற்பணம்

9.1. போதுமான கடன் கிடைப்பதைப் பொறுத்து, அந்நிய செலாவணி திணைக்களத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக மற்றும்/அல்லது அமுலில் உள்ள வேறு எந்தவொரு சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக, காலத்திற்கு காலம் வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய தீர்மானங்களுக்கு ஏற்ப அட்டை வாடிக்கையாளர் பின்வரும் சந்தர்ப்பங்களில் முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்;

9.2. (அ) அட்டை வாடிக்கையாளரின் ஆளடையாளத்தை நிரூபிக்கும் ஆவணத்துடன், வங்கியின் எந்தவொரு கிளையிலும் அல்லது எந்தவொரு உறுப்பு நிறுவனத்திலும், தேவையான கொடுக்கல்வாங்கல் ஆவணப் பத்திரங்களைப் பூர்த்தி செய்து, அட்டையை சமர்ப்பிப்பதன் மூலமாக பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) வங்கியின் அல்லது வேறு எந்தவொரு வங்கியின் அல்லது வங்கி அல்லது ஸ்தாபனம் ஒன்றுடன் அவற்றின் ஏடிஎம் மையத்தை உபயோகிப்பதற்கு வங்கி ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ள எந்தவொரு ஏடிஎம் மையத்திலும் அட்டையை உபயோகித்து

முற்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், குறித்த ஏடிஎம் கொண்டுள்ள தினசரி மீளப்பெறும் உச்ச எல்லையைப் பொறுத்தே முற்பணத்தொகையை பெற்றுக்கொள்ள முடியும்.

9.3. முற்பணங்கள் தொடர்பில் ஏடிஎம், வங்கி, விற்பனையாளர், முகவர், உள்நாட்டு அல்லது நாட்டு வரையறைகள் மற்றும் கட்டுப்பாடுகள், அந்நியச் செலாவணி விதிமுறைகள் மற்றும்/அல்லது காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படுகின்ற ஏனைய ஒழுக்காற்று அதிகார கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். ஏடிஎம் மையமொன்றில் கொடுக்கல்வாங்கலை மேற்கொள்ள ஏதுவாக அட்டையுடன் சேர்த்து உபயோகிக்கக்கூடிய தனிப்பட்ட அடையாள இலக்கமொன்றை வங்கி வழங்கும். அட்டை வாடிக்கையாளர் எந்தவொரு சூழ்நிலையிலும் தனிப்பட்ட அடையாள இலக்கத்தை வேறு எந்த நபருக்கும் தெரியப்படுத்தல் ஆகாது.

9.4. தனிப்பட்ட அடையாள இலக்கத்துடன் இணைந்ததாக அட்டையை உபயோகித்து மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பில் வங்கியின் பதிவுகளுக்கு கட்டுப்படுவதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும். அட்டை மூலமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கு அட்டை வாடிக்கையாளர் அங்கீகாரம் அளித்துள்ளார் என்பதற்கு வங்கியின் முறைமைகளிலுள்ள தகவல் விபரங்கள் போதுமான சான்றாக அமைந்துள்ளதுடன், அட்டை வாடிக்கையாளர் அவற்றிற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

9.5. முற்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அட்டை வாடிக்கையாளர் அட்டையை உபயோகிக்கும் போது காலத்திற்கு காலம் வங்கியால் குறிப்பிடப்படுகின்றவாறு முற்பணம் தொடர்பான நிதி அறவீடுகள், வட்டி மற்றும் கட்டணங்களை அட்டை வாடிக்கையாளர் இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்வதாகவே கணிக்கப்படும். முற்பணம் பெறப்பட்ட திகதியிலிருந்து அது முழுமையாக மீளச் செலுத்தப்படும் வரை முற்பணத்திற்கான நிதி அறவீடு விதிக்கப்படும். அட்டை வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய நிதி அறவீட்டில் வங்கி காலத்திற்கு காலம் மாற்றங்களை மேற்கொள்ளலாம்.

9.6. முற்கொடுப்பனவு பிரயாண அட்டை, கேள்வி வரைவுகள், தொலைத்தந்தி பணப்பரிமாற்றங்கள் போன்ற நேரடியாக பணமாக மாற்றப்படக்கூடியவற்றை அட்டையை உபயோகித்து கொள்வனவு செய்யும் போது அவையும் முற்பணமாக கருதப்பட்டு மேலே 9.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அறவீடுகள் விதிக்கப்படும்.

9.7. அட்டை வாடிக்கையாளருக்கு எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி இவ்வசதியை வங்கியால் மீளப்பெற முடியும்.

10. துணை அட்டை

10.1 பிரதான அட்டை வாடிக்கையாளரால் பிரேரிக்கப்படுகின்ற நபருக்கு (நபர்களுக்கு) பிரதான அட்டை வாடிக்கையாளர் மற்றும் துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) ஆகியோரின் கூட்டு விண்ணப்பத்திற்கு அமைவாக வங்கி முற்றிலும் தனது தீர்மானத்தின் பிரகாரம் துணை அட்டையை(களை) அங்கீகரித்து, விநியோகிக்க முடியும். துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயது கொண்டவராகவும், சொந்த குடும்ப அங்கத்தவராகவும்(களாகவும்) (வாழ்க்கைத் துணை, பிள்ளை, பெற்றோர், சகோதரன் அல்லது சகோதரி) இருக்க வேண்டியதுடன், பிரதான அட்டை வாடிக்கையாளரில் நேரடியாக தங்கியுள்ள மாணவர்கள் கல்வி நோக்கங்களுக்காக மட்டும் துணை அட்டையை பெற்றுக்கொள்ளும் தகைமையைக் கொண்டுள்ளதுடன், அத்தகைய நபரும்(நபர்களும்) இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

10.2 பிரதான அட்டை வாடிக்கையாளருக்கு ஒதுக்கப்படுகின்ற கடன் வரம்பானது துணை அட்டை வாடிக்கையாளரின் கடன் எல்லையும் உள்ளடக்கப்பட்டதாக அமைந்துள்ளதுடன், பிரதான அட்டை வாடிக்கையாளரும், துணை அட்டை வாடிக்கையாளரும் முறையே தமது அட்டைகளினூடாக மேற்கொள்ளும் செலவினங்கள் குறிப்பிட்ட மொத்த கடன் வரம்பை மீறுவதாக அமையாமல் பேணுதல் வேண்டும்.

10.3 துணை அட்டை செல்லுபடியாகும் கால எல்லையானது பிரதான அட்டையின் செல்லுபடியாகும் கால எல்லையில் தங்கியுள்ளது. துணை அட்டையை முடிவுறுத்துவது பிரதான அட்டையை முடிவுறுத்தாது.

10.4 வங்கி மீது பிரதான அட்டை வாடிக்கையாளரும், துணை அட்டை வாடிக்கையாளரும் கொண்டுள்ள உத்தரவாதங்கள், பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பிரதான அட்டை வாடிக்கையாளருக்கும், துணை அட்டை வாடிக்கையாளருக்கும் இடையிலான எந்தவொரு பிணக்கு அல்லது எதிர் கோரிக்கைகள் காரணமாக எந்த விதத்திலும் இதன் கீழான வங்கியின் உரிமைகளை பாதிக்கலாகாது.

10.5 பிரதான அட்டை வாடிக்கையாளர் மற்றும் துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) தமது அட்டை கணக்குகளை கூட்டாக அல்லது வெவ்வேறாக அட்டையை(களை) உபயோகித்து நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து கொடுக்கல்வாங்கல்களுக்கும் கூட்டாகவும், தனித்தனியாகவும் பொறுப்பேற்றல் வேண்டும்.

10.6 துணை அட்டையை இரண்டாக வெட்டி அதனுடன் இணைத்து எழுத்து மூலமான தகவலை வங்கிக்கு அனுப்புவதன் மூலமாக துணை அட்டை வாடிக்கையாளரின்(களின்) அதிகாரத்தை பிரதான அட்டை வாடிக்கையாளர் மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.

10.7 மேலே 10.6 இல் குறிப்பிட்டவாறு மீளப்பெறும் திகதிக்கு முன்னர் துணை அட்டை வாடிக்கையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளும் செல்லுபடியானவையாக கருதப்படுவதுடன், அதற்கு அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

10.8 துணை அட்டை வாடிக்கையாளரின் எந்தவொரு சட்டபூர்வ இயலாமை அல்லது இயலாமை காரணமாகவோ அல்லது துணை அட்டை வாடிக்கையாளர் இந்த விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் எவற்றையும் மீறினாலோ வங்கிக்கு ஏற்படுகின்ற சட்டரீதியான அல்லது வேறு எந்த விதத்திலான இழப்பு, சேதாரம், பொறுப்பு, செலவினங்கள் அல்லது செலவுகளுக்கான நட்டஈட்டை பிரதான அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

11. அட்டையை ஏற்றுக்கொள்ளுதல்

11.1. முறையே பிரதான அல்லது துணை அட்டை வாடிக்கையாளரின் கையொப்பங்களைக் கொண்டுள்ள அட்டை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். வர்த்தக ஸ்தாபனங்களும், நிதி நிறுவனங்களும் அட்டையை ஏற்றுக்கொள்ளும் அடையாளத்தை வழக்கமாக காட்சிப்படுத்துகின்றன. எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் அட்டையை எந்தவொரு வர்த்தக/நிதி நிறுவனம் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றமைக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ளாது. அட்டை ஊக்குவிப்பு விளம்பர பொருள் அல்லது எந்த இடத்திலும் அட்டையின் அடையாளம் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றமை உங்களுடைய அட்டை மூலமாக கொள்வனவு செய்யப்படக்கூடிய அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகள் அங்கு கிடைக்கப்பெறுகின்றன என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் கிடையாது.

11.2. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு போன்ற உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும் போது குறித்த கையாளுதல் மற்றும் சேவைக் கட்டணங்களுக்கு உட்பட்டவை.

11.3. எனினும் எந்தவொரு வர்த்தக ஸ்தாபனமோ/வங்கியோ அட்டையை ஏற்றுக்கொள்ள மறுத்தமை தொடர்பில் இடத்தின் பெயர், திகதி மற்றும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை இடம்பெற்ற நேரம் மற்றும் விசாரணைகளுக்கு வங்கிக்கு உதவக்கூடிய ஏனைய தகவல்

விபரங்களுடன் நீங்கள் வங்கியிடம் முறைப்பாட்டினை மேற்கொள்ள முடியும்.

12. கணக்குகளின் கூற்று

12.1. ஒவ்வொரு மாதமும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திகதியில் அட்டைக் கணக்கு தொடர்பான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூற்று ஒன்றை சாதாரண அஞ்சல் மூலமாக அட்டை வாடிக்கையாளருக்கு வங்கி அனுப்பி வைக்கும். கடைசிக் கூற்றின் பின்னர் எவ்விதமான நிலுவை தொகை இல்லாவிட்டாலோ அல்லது அட்டையை உபயோகித்து எவ்விதமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளும் இடம்பெற்றிரா விட்டாலோ, எவ்விதமான கூற்றும் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

12.2. எவ்விதமான காரணங்களை முன்னிட்டும் கணக்கு கூற்று அட்டை வாடிக்கையாளருக்கு கிடைக்கப் பெற்றிராமை செலுத்த வேண்டிய தொகையை உரிய நேரத்தில் செலுத்த தவறுகின்றமைக்கு செல்லுபடியாகும் காரணமாக அமையாது. நீங்கள் வழமையாக கூற்றினைப் பெற்றுக்கொள்ளும் திகதியிலிருந்து 10 தினங்களுக்குள் கூற்றினை பெற்றுக்கொள்ளாவிடில் செலுத்த வேண்டிய தொகை எவ்வளவு என்பதை அறிந்துகொள்ள தயவுசெய்து அட்டை மையத்தை அழைத்து அறிந்து கொள்ளவும்.

12.3. அட்டைக் கணக்கு தொடர்பில் விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு கணக்குகள் கூற்றினையும் அட்டை வாடிக்கையாளர் ஆராய்ந்து பார்க்க வேண்டியதுடன், அதில் தவறுகள் ஏதேனும் இருக்கும் பட்சத்தில் கூற்று திகதியிலிருந்து 14 தினங்களுக்குள் வங்கியின் அட்டை மையத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அத்தகைய தவறு தொடர்பில் மேற்குறிப்பிட்ட 14 தினங்களுக்குள் அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு அறிவிக்கத் தவறும் அல்லது புறக்கணிக்கும் பட்சத்தில், கணக்குகள் கூற்றிலுள்ள அனைத்து பதிவுகளுக்கும் அட்டை வாடிக்கையாளர் பொறுப்பேற்றுக் கொள்வதுடன், அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் உறுதியாக நிரூபணமானவை எனக் கருதப்படுவதுடன், அதன் பின்னர் கணக்குகளின் கூற்று தொடர்பில் அட்டை வாடிக்கையாளர் எவ்விதமான பிணக்கினையும் எழுப்ப முடியாது. பிரதான அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ள சமீபத்தைய முகவரிக்கு கணக்குகளின் கூற்று அனைத்தும் சாதாரண தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படுவதுடன், அனுப்பி வைக்கப்பட்ட பின்னர் 48 மணி நேரத்தில் அவருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவே கருதப்படும். அட்டைக் கணக்கு தொடர்பான எந்தவொரு முறைப்பாட்டையும் +94 117 640 640 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது காலத்திற்கு காலம் வங்கியால்

நியமிக்கப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள வேறு எந்தவொரு இலக்கத்தினூடாக வங்கி மையத்தை தொடர்பு கொண்டு மேற்கொள்ள முடியும்.

12.4. முன்னைய கூற்று தயாரிக்கப்பட்ட திகதியின் பின்னர் தற்போதைய கூற்று தயாரிக்கப்படுகின்ற வர்த்தக நடவடிக்கை நேர முடிவு வரையான காலப்பகுதியில் அட்டைக் கணக்கு தொடர்பில் பெறப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து அட்டை கொடுக்கல்வாங்கல்களின் விபரங்களும் கணக்கு கூற்றில் உள்ளடக்கப்படும்.

12.5. கணக்குக் கூற்றில் நிலுவையாக உள்ள தொகை பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்;;

12.5.1. அட்டை வாடிக்கையாளர் அல்லது எந்தவொரு துணை அட்டை வாடிக்கையாளரால்(களால்) அங்கீகரிக்கப்பட்டு தபால் மற்றும் தொலைபேசி மூலமான கோரல்கள் அடங்கலாக அட்டையை உபயோகித்து கொள்வனவு செய்யப்படுகின்ற அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அட்டைக் கணக்கில் அறவிடப்படும்.

12.5.2. தன்னியக்க டெலர் இயந்திரங்கள் மூலமாக பெறப்பட்டவை அடங்கலாக உங்களது அட்டைக் கணக்கிலுள்ள முற்பணங்கள்.

12.5.3. பாவனை தொடர்பில் இந்த கடனட்டை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் சரத்து 13 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் (உ-ம் கட்டணங்கள், சேவைக் கட்டணங்கள் போன்றவை) மற்றும் அதனுடன் சேர்ந்து அமுலில் உள்ள அரசாங்க வரிகள் மற்றும் கடனட்டை பாவனை தொடர்பாக நேருகின்ற வட்டியுடனான ஏனைய வங்கிக் கட்டணங்கள்.

13. கொடுப்பனவு மற்றும் கட்டணங்கள்

இப்பகுதியில் குறிப்பிடப்படுகின்ற அனைத்து தற்போதைய கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் தொடர்பான விபரங்கள் வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள சேவை மற்றும் விலை வழிகாட்டல் ஏட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், கோரிக்கையின் பேரில் அவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியும். இக்கட்டணங்கள் முற்கூட்டிய அறிவிப்புடன் காலத்திற்கு காலம் திருத்தம் செய்யப்படலாம்.

13.1. இணைந்து கொள்ளும் கட்டணம் மற்றும் வருடாந்த கட்டணம் ஆகியவற்றை அட்டை மற்றும் துணை அட்டை ஆகியன விநியோகிக்கப்படும் போது வங்கிக்கு (வங்கியின் கோரிக்கையின் பிரகாரம்) செலுத்துவதற்கு அட்டை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கின்றார். அட்டை இரத்துச் செய்யப்படும் போது அல்லது

வாடிக்கையாளரால் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் வருடாந்த கட்டணம் மீளளிப்பு செய்யப்பட மாட்டாது.

13.2. கணக்கு கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போதைய நிலுவையின் முழுத் தொகையையும் கணக்கு கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள செலுத்த வேண்டிய திகதிக்கு பிந்தாமல் செலுத்துவதற்கு அட்டை வாடிக்கையாளர் உடன்பட்டால், குறிப்பிட்ட கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி அன்று அல்லது அதற்கு முன்பதாக வங்கிக்கு கிடைக்கும் வகையில் தற்போதைய நிலுவையை முழுமையாக செலுத்தினால் அட்டை வாடிக்கையாளரிடம் எவ்விதமான நிதி அறவீடும் (முற்பணம் நீங்கலாக) மேற்கொள்ளப்பட மாட்டாது.

13.3. கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் நிலுவையில் உள்ள முழுத் தொகையையும் அட்டை வாடிக்கையாளர் செலுத்த தவறினால், வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வீதத்தில் வட்டி அறவிடப்படுவதுடன், தற்போதைய கணக்குக் கூற்று மாதத்தின் முதல் நாளிலிருந்து அடுத்த கணக்கு கூற்று திகதி வரை தினசரி அடிப்படையில் வட்டி கணிக்கப்படும். மேலே குறிப்பிட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல் தொடர்பான தொகையானது வட்டியைக் கணிக்கும் நோக்கத்திற்கு கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. எனினும், செலுத்தப்பட்ட கொடுப்பனவு இந்நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளப்படும்.

13.4. காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற மாதாந்த வீதத்தில் வட்டி அறவிடப்படும். அட்டைக் கணக்கிற்கு கொடுப்பனவு ஒன்று செலுத்தப்படுகின்ற சமயத்தில் அக்கொடுப்பனவு செலுத்தப்படுகின்ற திகதியில் நிலுவையாக உள்ள மொத்த தொகைக்கும் வட்டி அறவிடப்படுவது பொதுவான நடைமுறையாக உள்ளது. பகுதியளவு கொடுப்பனவின் போது கணக்கு கூற்று தயாரிக்கப்படுகின்ற திகதியில் இன்னமும் நிலுவையாக உள்ள தொகைக்கு அத்திகதி வரை வட்டி அறவிடப்படும்.

13.5. அட்டைக் கணக்கினை ஆரம்பித்த பின்னர் அட்டை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்கின்ற முதலாவது கூற்று கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து கூற்று தயாரிக்கப்படுகின்ற திகதி வரையான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் அது தொடர்பாக செலுத்த வேண்டிய கட்டணங்களின் விபரங்களைக் கொண்டிருக்கும். முற்பணம் பெறப்பட்டிராத பட்சத்தில் இக்கூற்றில் எவ்விதமான வட்டி அறவீடும் இடம்பெறாதிருப்பதுடன், முற்பணம் பெறப்பட்டிருப்பின் வட்டி அறவீடு உள்ளடக்கப்படும். கொடுப்பனவு

செலுத்தப்பட வேண்டிய திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக மொத்த தொகையும் செலுத்தப்பட்டால் வட்டி அறவிடப்பட மாட்டாது.

13.6. மொத்த நிலுவையும் செலுத்தப்படாமல் செலுத்தப்பட வேண்டிய குறைந்த பட்ச அல்லது மேற்பட்ட தொகையை கொடுப்பனவு செய்யும் போது வட்டி அறவிடப்படும். செலுத்தப்பட வேண்டிய வட்டித்தொகை அடுத்த பட்டியல் காலத்திற்கான கூற்றில் காண்பிக்கப்படும். எனினும். பட்டியல் தயாரிக்கும் காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கு (முற்பணம் தவிர்ந்த) இப்பட்டியல் காலத்தின் போது வட்டி அறவிடப்பட மாட்டாது.

13.7. ஆகவே கணக்குக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவையின் மொத்த தொகையையும் செலுத்துகின்ற அட்டை வாடிக்கையாளருக்கு தனது கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்காக (முற்பணங்கள் தவிர்ந்த) வட்டியை செலுத்துவதிலிருந்து விடுதலை கிடைக்கின்றது.

13.8. முற்பணங்களுக்கான வட்டியானது மீளப்பெறப்பட்ட திகதியிலிருந்து முழுமையாக செலுத்தப்படும் வரையான காலப்பகுதிக்கு அறவிடப்படும்.

13.9. செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவு அது செலுத்தப்பட வேண்டிய திகதி அன்று அல்லது அதற்கு முன்பதாக செலுத்தப்படா விட்டால், வட்டியுடன் சேர்த்து காலத்திற்கு காலம் அமுலில் உள்ள தாமத கொடுப்பனவுக் கட்டணத்தையும் அட்டை வாடிக்கையாளர் செலுத்த வேண்டி ஏற்படும்..

13.10. காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வீதங்களில் கட்டணங்கள் மற்றும் அறவீடுகளை உரிய வகையில் வங்கிக்கு செலுத்துவதற்கு அட்டை வாடிக்கையாளர் ஒப்புதல் அளிக்கின்றார்.

13.11. கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதியில் நிலுவையாக உள்ள தொகையை அட்டை வாடிக்கையாளர் செலுத்த தவறும் பட்சத்தில் அட்டைக் கணக்கில் கொடுப்பனவுகள் வரவு வைக்கப்படும் வரை தற்போது நிலுவையாக உள்ள தொகைக்கு தினசரி அடிப்படையிலும், வரவு வைக்கப்பட்ட பின்னர் குறைக்கப்பட்ட நிலுவையின் அடிப்படையிலும் நிதி அறவீடு கணிக்கப்படும்.

13.12. வங்கிக்கு கிடைக்கப்பெறுகின்ற அனைத்து கொடுப்பனவுகளும் பின்வரும் கொடுப்பனவு வரிசையில் அல்லது பொருத்தமானது என வங்கி தீர்மானிக்கின்ற வரிசை அடிப்படையில் வங்கியால் பிரயோகிக்கப்படும்:

13.12.1. அனைத்து நிதி அறவீட்டு நிலுவைகள், சேவைக் கட்டணங்கள், அறவீடுகள், முற்பணங்கள் மற்றும் முன்னைய எந்தவொரு கணக்குக்கூற்றிலும் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய செலவுகள்.

13.12.2. அனைத்து நிதி அறவீட்டு நிலுவைகள், சேவைக் கட்டணங்கள், அறவீடுகள், முற்பணங்கள் மற்றும் தற்போதைய கணக்குக்கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள ஏனைய செலவுகள்.

13.12.3. முன்னைய எந்தவொரு கணக்கு கூற்றிலும் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தப்படாத அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள்.

13.12.4. தற்போதைய கணக்கு கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள செலுத்தப்படாத அட்டைக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகள்.

13.12.5. அனைத்து நிதி அறவீட்டு நிலுவைகள், சேவைக் கட்டணங்கள், அறவீடுகள், முற்பணங்கள் மற்றும் தற்போதைய கணக்குக்கூற்றில் காண்பிக்கப்படாத ஏனைய செலவுகள் மற்றும்; அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள்.

13.13. வருடாந்த கட்டணம், கையாளும் கட்டணம், மேலதிக கட்டணங்கள், நிதி அறவீடுகள், குறிப்பிட்ட குறைந்தபட்ச கொடுப்பனவு தொகை மற்றும்/அல்லது தாமத கட்டணங்கள் அல்லது வேறு எந்தவொரு கட்டணங்கள் தொடர்பிலும் வீதத்தை அல்லது கணிப்பீடு செய்யும் முறையை முற்றிலும் தனது தீர்மானத்தின் கீழ் மாற்றம் செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

13.14. பதில் அட்டையொன்றை விநியோகிக்குமாறு வங்கியிடம் அட்டை வாடிக்கையாளர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு பதில் அட்டைக் கட்டணம் அறவிடப்படும். விற்பனை வவுச்சர்கள், முற்பண சிட்டைகள் மற்றும் காலத்திற்கு காலம் வங்கியால் வழங்கப்படுகின்ற வேறு எந்த சேவைகளையும் வங்கியிடம் அட்டை வாடிக்கையாளர் கோரும் பட்சத்தில் வங்கியால் குறிப்பிடப்பட்டவாறு மேலதிக கட்டணங்கள் அறவிடப்படும்.

13.15. நிலுவையாக உள்ள தொகையை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ செலுத்தும் வகையில் அட்டை வாடிக்கையாளர் வரைந்த பின்னர் திரும்பும் காசோலைகளுக்கான கட்டணத்தை வங்கி அறவிடுவதுடன், வங்கியின் உரிமைகளுக்கு பங்கம் இல்லாது எந்த நேரத்திலும் பொருத்தமான சட்ட நடவடிக்கையையும் அது எடுக்கும்.

13.16. அட்டைக் கணக்கின் கீழ் எந்நேரமும் அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ள சமயத்திலும், அல்லது எந்த வங்கிக் கணக்கு தொடர்பாகவும் அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டிய சமயத்திலும், அல்லது நடைமுறை அல்லது வேறு எந்தவொரு கணக்கின் சார்பில் வங்கிக்கு செலுத்த வேண்டிய பட்சத்திலும், அல்லது அத்தகைய கணக்குகளின் விதிகளின் கீழ் அட்டை வாடிக்கையாளர் செலுத்த தவறும் பட்சத்திலும் அல்லது அட்டை வாடிக்கையாளருக்கு வங்கியால் வழங்கப்பட்டுள்ள வேறு எந்தவொரு வங்கிச்சேவை வசதிகளில் நிலுவையுள்ள பட்சத்திலும் அட்டை கணக்கிலுள்ள(களிலுள்ள) மொத்த நிலுவையும் உடனடியாக செலுத்தப்பட வேண்டும் என்பதை அட்டை வாடிக்கையாளர் வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதுடன், இங்கு சரத்து 19 (முடிவுறுத்தல்) விதிகள் அதற்குப் பொருந்தும்.

13.17. அட்டைக் கணக்கின் நிலுவையைக் குறிப்பிட்டு வங்கியின் அலுவலர் ஒருவரால் கைச்சாத்திடப்பட்டுள்ள சான்றிதழ், அத்திகதியில் வங்கி மீது அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள பொறுப்பின் முதன்மையான ஆதாரமாக அமையும்.

13.18. மேற்கொள்ளப்படும் எந்தவொரு பண வைப்பும் அட்டைக் கணக்கில் வங்கியால் வரவு வைக்கப்பட்ட பின்னரே பெற்றுக்கொண்டதாக கணிக்கப்படும். தன்னியக்க டெலர் இயந்திரங்கள் மற்றும் காசோலை வைப்புப் பெட்டகங்களில் வைப்புச் செய்யப்படுகின்ற காசோலைகள் அதற்கு அடுத்த அலுவலக தினத்திலேயே சேகரிக்கப்படும்.

13.20. வங்கிக் கிளை அமைந்திராத இடமொன்றில் வரையப்படுகின்ற காசோலைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்றவாறு நடைமுறைப்படுத்தல் மற்றும் கையாளுகை கட்டணம் ஆகியவற்றுக்கு உட்பட்டது.

13.21. கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியில் அட்டை வாடிக்கையாளரின் கடனட்டைப் பட்டியலில் நிலுவையாக உள்ள தொகையின் குறிப்பிட்ட ஒரு வீதத்தை அட்டைக் கணக்கில் வரவு வைக்கும் விதத்தில் அட்டை வாடிக்கையாளரின் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கிலிருந்து மாற்றுமாறு கோரும் நேரடிப் பற்று நிலையான கட்டளையை அட்டை வாடிக்கையாளர் முன்வைக்க முடியும். அத்தகைய நிலையான கட்டளையில் திருத்தங்கள் அல்லது அதனை இரத்துச் செய்ய விரும்பும் பட்சத்தில் அடுத்த கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியிலிருந்து குறைந்தபட்சம் இரு

வாரங்களுக்கு முன்னராவது வங்கியை எட்டும் வகையில் அறிவிப்பேன் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

13.22. வங்கியில் குறிப்பிட்ட கணக்கொன்றிலிருந்து கடன் அட்டைக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நேரடிப் பற்று நிலையான கட்டளை ஏற்பாடு தொடர்பில் பின்வரும் மேலதிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளன.

I. வழங்கப்பட்டுள்ள காசோலைகள் மற்றும் வங்கியுடனான ஏனைய ஏற்பாடுகள் ஏதாவது இருப்பின், மேற்குறிப்பிட்ட நிலையான கட்டளைக்கு முன்னுரிமை அளிப்பதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

II. கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதிக்கு முன்னைய தினத்தில், நிலையான கட்டளைத் தேவையை பூர்த்தி செய்வதற்காக குறித்த கணக்கில் போதுமான நிதி இருப்பதை உறுதி செய்வதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். குறித்த கணக்கில் போதுமான மீதி இல்லாத பட்சத்தில், நிலையான கட்டளைகளுக்கு அமைவாக கொடுப்பனவு செய்யப்படவேண்டிய தொகையை மீள் அறவீடு செய்வதற்கு காலத்திற்கு காலம் மேலதிப் பற்று வசதியை வங்கி தனது தீர்மானத்தின் பிரகாரம் வழங்கலாம். காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வீதத்தில் வட்டி அடங்கலாக தொடர்புபட்ட அனைத்து அறவீடுகள், கட்டணங்கள் மற்றும் தீர்வைகள் உட்பட்ட மொத்த நிலுவை தொகையையும் வங்கியின் கோரிக்கையின் பிரகாரம் அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும்.

III. வங்கியில் குறித்த கணக்கிலிருந்து கொடுப்பனவை மேற்கொள்வதற்காக நேரடிப் பற்று நிலையான கட்டளைகளை வழங்கியுள்ள சமயத்தில், கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதிக்கும் கூற்று திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு இடைக்கால கொடுப்பனவுகளும் வங்கியால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

IV. நிலையான கட்டளைகளை மேற்கொள்வதற்கு குறித்த கணக்கில் போதுமான நிதி இல்லாத பட்சத்தில், பகுதியளவு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருத்தாலும் அல்லது வங்கியால் மீள அறவிடப்பட்டிருந்தாலும் தானியங்கு கொடுப்பனவு மறுப்புக் கட்டணமாக ரூபா 250 தொகையை வங்கி அறவிடலாம். இக்கட்டணம் வங்கியின் தீர்மானத்திற்கு அமைவாக காலத்திற்கு காலம் மாறுபடலாம். நிலையான கட்டளையை மேற்கொள்வதற்கு குறித்த

கணக்கில் தொடர்ச்சியாக மீதி இல்லாமல் காணப்படும் சமயத்தில் அத்தகைய நிலையான கட்டளைகள் நிறுத்தம் செய்யப்படும்.

13.23. அட்டைக் கணக்கு தொடர்பில் வங்கியில் அட்டை வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் காலத்திற்கு காலம் வங்கியால் தீர்மானிக்கப்படுகின்ற வகையில் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வங்கியில் அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள ஏனைய பொறுப்புக்களை அல்லது அட்டைக் கொடுப்பனவை தீர்ப்பதற்கு வங்கியால் உபயோகிக்கப்படும்.

13.24. வழமையான வர்த்தக நடவடிக்கைகளின் போது வங்கியால் உண்மையில் பெற்றுக்கொள்கின்ற கொடுப்பனவுகள் எத்திகதியில் பெறப்படுகின்றன என்பதே கருத்தில் கொள்ளப்படுவதுடன், கணக்குக்கூற்று அனுப்பிவைக்கப்பட்ட திகதி கருத்தில் கொள்ளப்பட மாட்டாது. அட்டைக் கணக்கில் கொடுப்பனவு வரவு வைக்கப்படுவதற்கு குறைந்தபட்சம் 3-4 தினங்கள் எடுக்கலாம்.

13.25. அட்டைக் கணக்கு தொடர்பில் எந்த நாணயத்தில் பட்டியல் தயாரிக்கப்படுகின்றதோ அதே நாணயத்திலேயே அனைத்து கொடுப்பனவுகளையும் அட்டை வாடிக்கையாளர் மேற்கொள்ள வேண்டும். கொடுப்பனவு வேறு ஒரு நாணயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சமயத்தில் அத்தகைய கொடுப்பனவை பட்டியல் நாணயத்திற்கு மாற்றும் போது வங்கியால் அறவிடப்படுகின்ற அல்லது வங்கிக்கு ஏற்படுகின்ற அனைத்து நாணய மாற்று, தரகு மற்றும் ஏனைய கட்டணங்களை அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுகின்ற திகதியில் வங்கியின் தீர்மானத்திற்கு ஏற்பவே நாணய மாற்று வீதம் மேற்கொள்ளப்படும். அட்டைக் கணக்கின் பட்டியல் நாணயத்தில் அட்டை வாடிக்கையாளர் மேற்கொள்ளும் அனைத்து கொடுப்பனவுகளும் அட்டை கணக்கில் வங்கி தொகையை பதிவு செய்கின்ற திகதியிலேயே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன், பட்டியல் நாணயத்தை விட வேறு நாணயங்களில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் அவை பட்டியல் நாணயத்திற்கு மாற்றப்படும் திகதி அல்லது அதன் பெறுமானத்தை வங்கி பெற்றுக்கொள்கின்ற திகதியிலேயே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

13.26. இந்த ஒப்பந்தத்தின் ஏனைய நிபந்தனைகளுக்கு பாரபட்சமின்றி, அட்டை வாடிக்கையாளர் ஒரு மாதத்திற்கு மேல் இலங்கையில் இல்லாதிருக்கும் போது அட்டை வாடிக்கையாளர் அட்டைக் கணக்கிற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு குறிப்பிடட அறிவுறுத்தல்களை தெளிவாக வழங்குவதுடன், அவர் இலங்கையை

விட்டு செல்லும் முன்னர் வங்கியின் அட்டை மையத்திற்கு அத்தகைய அறிவுறுத்தல்களை முற்கூட்டியே வழங்குதல் வேண்டும். அட்டை வாடிக்கையாளர் இவ்வாறு முறையாக அறிவித்தல் வழங்காத பட்சத்தில் வங்கி தனது தீர்மானத்தின் பிரகாரம் அட்டையை இரத்துச் செய்யும் உரிமையக் கொண்டுள்ளது.

13.27. கணக்கு கூற்று தனக்கு கிடைக்கப்பெறவில்லை என்பதை நேரகாலத்தில் நிலுவைக்கான கொடுப்பனவை செலுத்த தவறுவதற்கு போதுமான காரணமாக அட்டை வாடிக்கையாளரால் ஒப்புவிக்க முடியாது. எதிர்பாராத சூழ்நிலைகளால் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளால் கணக்கு கூற்று கிடைக்கப்பெறாமைக்கு வங்கியை பொறுப்பேற்கச் செய்ய முடியாது.

13.28. அட்டை வாடிக்கையாளர் பிரயாணம் செய்யும் அல்லது நகரத்திற்கு வெளியில் செல்லும் பட்சத்தில் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி அன்று அல்லது அதற்கு முன்பதாக வங்கியில் குறைந்த பட்சமாக செலுத்தப்பட வேண்டிய ஆகக்குறைந்த தொகையை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை அட்டை வாடிக்கையாளர் உறுதி செய்தல் வேண்டும்.

13.29. அங்கத்துவ ஸ்தாபனத்திடமிருந்து முறையாக விநியோகிக்கப்பட்ட வரவு வவுச்சர் கிடைக்கப்பெற்ற பின்னரே மீளளிப்பு தொடர்பான எந்தவொரு தொகையையும் அட்டைக் கணக்கில் வங்கி வரவு வைக்கும்.

13.30. எந்தவொரு கணக்குக் கூற்றுக்கும் வங்கியில் அட்டை வாடிக்கையாளர் மேற்கொள்ளும் எந்தவொரு தொகையிலான கொடுப்பனவும் கணக்குக் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ள அனைத்து பதிவுகளையும் அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார் என்பதற்கு போதுமான ஆதாரபூர்வ சான்றாக கருதப்படும்.

13.31. சட்டத்தின் பிரகாரம் எவ்விதமான கழிவும் அல்லது நிறுத்தி வைக்கப்படும் தொகையும் தேவைப்பட்டாலன்றி இந்த ஒப்பந்தத்தின் கீழ் மொத்த தொகையையும் எவ்விதமான கழிவோ அல்லது நிறுத்தி வைப்போ இன்றி (எதிரீ டு, எதிர்க் கோரல், வரி விதிப்பு, அறவீடுகள் அல்லது வேறு எவையும்) அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். சட்டத்தின் பிரகாரம் கழிவு அல்லது நிறுத்தி வைத்தல் தேவைப்படின் அத்தகைய தொகைகளை கழித்த பின்னர் எமக்கு கிடைக்கவேண்டிய தொகை கிடைக்கின்றவாறு மேலதிக தொகையை அட்டை வாடிக்கையாளர் உடனடியாக செலுத்துதல் வேண்டும். கழிக்கப்படும் அல்லது நிறுத்தி வைக்கப்படும் அனைத்து

தொகைகள் தொடர்பில் உரிய அதிகார சபையின் உத்தியோகபூர்வ ரசீதை நீங்கள் எம்மிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

13 ( b ) தவணை முறைக் கொடுப்பனவுகள்

தவணைக் கொடுப்பனவு முறையில் பொருட்களை அல்லது சேவைகளை நீங்கள் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானித்தால், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் மொத்த பெறுமதி உங்களது அட்டையில் முடக்கப்படும்.

13.32. தவணைக் கொடுப்பனவு முறையில் நீங்கள் பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்தால் அல்லது தொடர்ச்சியான அடிப்படையில் கொடுப்பனவுகளைச் செலுத்த விரும்பினால், ஒவ்வொரு தவணைக் கொடுப்பனவும் அட்டைக் கணக்கில் நிலுவையாக மாறும் சமயத்தில் கொடுப்பனவை செலுத்தும் வகையில் அத்தகைய தவணைக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நீங்கள் இத்தால் எமக்கு அங்கீகாரம் அளிக்கின்றீர்கள்.

13.33. அட்டையை உபயோகிக்கும் உங்களது உரிமை இடை நிறுத்தம் செய்யப்பட்டால் அல்லது உங்களது அட்டைக் கணக்கு முடிவுறுத்தம் செய்யப்பட்டால், எமது தெரிவிற்கு அமைவாக மற்றும் எமது உரிமைகள் மற்றும் பரிகாரங்களுக்கு எவ்விதமான பாதிப்புக்களுமின்றி, எஞ்சியுள்ள தவணைக் கொடுப்பனவுகளின் மொத்த தொகையை பட்டியலில் இட்டு உங்களுக்கு நாம் அனுப்பி வைக்கக்கூடும்.

13.34. அத்தகைய தவணை முறைக் கொடுப்பனவுத் திட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட ஏனைய குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதற்கு நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்கள். இச்சரத்தின் நிபந்தனைகள் தொடர்பில் பிணக்குகள் ஏதேனும் எழுகின்ற பட்சத்தில் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு தேவையான அளவில் மட்டுமே அது முழுமையாக்கப்படும்.

14. சட்ட ஒழுங்கு முறைகள்

14.1. அட்டை(கள்) பாவனை தொடர்பில் இலங்கை மத்திய வங்கியால் அல்லது அதை ஒத்த ஒழுக்காற்று அதிகார சபைகளால் காலத்திற்கு காலம் விநியோகிக்கப்படுகின்ற அனைத்து ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டு நடப்பேன் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வதுடன், அவ்வாறு அமுலில் உள்ள ஒழுங்குமுறைகளை மீறுவதால் அல்லது அதற்கு கட்டுப்பட்டு நடக்காது போவதால் வங்கிக்கு ஏற்படுகின்ற எந்த விதமான இழப்பு, கோரல் அல்லது செலவுகளுக்கான நட்டஈட்டை அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு செலுத்த வேண்டும்.

14.2. மூலதன கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் வியாபார நோக்கங்களுக்காக பாரிய அளவில் நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்தல்/இறக்குமதி செய்தல் ஆகியவற்றுக்கு அட்டையை அட்டை வாடிக்கையாளர் உபயோகித்தல் ஆகாது.

14.3. இந்த அட்டையை இலத்திரனியல் பணப் பரிமாற்றத்திற்கு உபயோகித்தால் அல்லது தன்னியக்க டெலர் இயந்திரத்தின் மூலமாக வெளிநாட்டு நாணயத்தில் பணம் மீளப் பெறுகையில் 2017 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி சட்ட மூலம் 12 இன் நிபந்தனைகளின் கீழ் விநியோகிக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறைகள் மற்றும் பணிப்புரைகள் மற்றும் காலத்திற்கு காலம் ஏனைய ஒழுக்காற்று அதிகார சபைகளால் விநியோகிக்கப்படுகின்ற ஏனைய ஒழுங்கு முறைகள் ஆகியவற்றிற்கு உட்பட்டதுடன், அனுமதி அங்கீகாரத்திற்கான தேவைகளுக்கு மட்டுமே உபயோகித்தல் வேண்டும்.

14.4. வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக அட்டை வாடிக்கையாளர் இலங்கையிலிருந்து புலம்பெயரும் அல்லது இலங்கையை விட்டுச் செல்லும் சமயத்தில் அட்டையை வங்கியிடம் மீள ஒப்படைக்கும் நிபந்தனையின் பிரகாரமே இந்த அட்டை விநியோகிக்கப்படுகின்றது. அவ்வாறு இல்லையெனில், தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கு ஆகியவற்றிலுள்ள வரவு மீதிகளுக்கு எதிராக விநியோகிக்கப்பட்ட அட்டையை உள்வரும் பணப்பரிமாற்றங்கள் அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்கின் மூலமாக கொடுப்பனவுகளை மேற்கொண்டு நிலுவையாக உள்ள தொகைகளை செலுத்தும் நிபந்தனையின் கீழ் மட்டுமே அட்டையை தொடர்ந்தும் உபயோகிக்க முடியும்.

14.5. அந்நிய செலாவணித் திணைக்களத்தின் பணிப்பாளர் அல்லது வேறு எந்தவொரு ஒழுக்காற்று அதிகார சபைகளினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற தேவைப்பாடுகளுக்கு கட்டுப்பட்டு வங்கி செயற்படுவதுடன், இலங்கை சோசலிச சனநாயகக் குடியரசில் அமுலில் உள்ள விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் உரிய அதிகார சபைகளிடம் அத்தகைய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் தொடர்பான விபரங்களை வங்கி பகிர்ந்து கொள்ளும்.

14.6. அந்நிய செலாவணி ஒழுங்குமுறைகள் அல்லது அமுலில் உள்ள ஏனைய சட்டரீதியான ஒழுங்குமுறைகளை எவ்விதமான காரணங்களாலும் மீறும் பட்சத்தில் அட்டை வாடிக்கையாளருக்கு(களுக்கு) எவ்விதமான முன்னறிவித்தலையும் வழங்காமல் வங்கி தனது சொந்த தீர்மானத்தில் அட்டையை இரத்துச் செய்யக்கூடும்.

15. மீள் அறவீடு

அட்டைக் கணக்கில் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை மீள் அறவிடுவதற்காக வங்கியில் அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள எந்தவொரு கணக்கிலும்/களிலும் உள்ள மீதியை எந்நேரமும், எவ்விதமான முன்னறிவித்தலுமின்றி மாற்றம் செய்கின்ற அல்லது அறவிடுகின்ற நடவடிக்கையை வங்கி மேற்கொள்ளக்கூடும்.

மீள்கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகையை வாடிக்கையாளர் செலுத்த தவறாத பட்சத்தில் அல்லது எவ்விதமான பதிலும் அல்லது ஒத்துழைப்பும் வழங்காத பட்சத்தில் வாடிக்கையாளர் வங்கியில் பதிவிட்டுள்ள அவரது தொடர்பு கொள்ளும் அல்லது நிரந்தர முகவரிக்கு நேரடியாக சென்று மீள்அறவீட்டு நடவடிக்கையை அல்லது பணத்தை சேகரிப்பதற்கு வங்கி தனது பணியாளர்களை (சேகரிப்பதற்கு வெளிச்சேவையமர்த்தப்படுகின்ற அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் அடங்கலாக) பணியில் ஈடுபடுத்தும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

16. அட்டையின் செல்லுபடி, காலாவதி மற்றும் புதுப்பித்தல்

16.1. அனைத்து அட்டைகளும் பொதுவாக ஒரு வருட செல்லுபடி காலத்துடனேயே விநியோகிக்கப்படுகின்றன. வங்கி தனது தீர்மானத்தின் பிரகாரம் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட செல்லுபடி காலத்தைக் கொண்ட அட்டைகளை விநியோகிக்கக்கூடும். அட்டையில் தோன்றுகின்ற காலாவதி திகதியில் அட்டையின் செல்லுபடி காலாவதியாகும்.

16.2. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறினாலன்றி, வங்கி உங்களது அட்டையின் (உங்களது துணை அட்டையையும்) செல்லுபடி காலத்தை தன்னியக்கமாக புதுப்பித்து, உங்களது தற்போதைய அட்டை(கள்) காலாவதியாவதற்கு வழமையாக 15 தினங்களுக்கு முன்பதாக உங்களது புதிய அட்டையை(களை) அனுப்பி வைக்கும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் புதுப்பிக்கப்பட்ட அட்டை(கள்) உங்களுக்கு கிடைக்கப்பெறா விட்டால், தயவு செய்து வங்கியின் அட்டை சேவைகள் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

16.3. ஒரு மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கான நிலுவைத் தொகைகளை கொண்டிராத அனைத்து அட்டைகளும் தன்னியக்கமாகவே புதுப்பிக்கப்படும். தனது அட்டை அல்லது துணை அட்டை புதுப்பிக்கப்படுவதை வேண்டாத எந்த அட்டை வாடிக்கையாளரும் எழுத்து மூலமான வெளிப்பாட்டினை இரண்டு மாதங்களுக்கு முன்பதாக அட்டை சேவைகள் பிரிவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். காலாவதியாவதற்கு இரு மாதங்களுக்கு முன்னர் அல்லது 30 தினங்களுக்கும் குறைவான காலத்தில் அனுப்பி

வைக்கப்படுகின்ற வெளிப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இவ்வாறு இல்லாத பட்சத்தில், புதுப்பிப்பதற்கான கட்டணம் அறவிடப்படுவதுடன், (காலத்திற்கு காலம் புதுப்பித்தலுக்காக விதிக்கப்படுகின்ற கட்டணத்திற்கு அமைவாக) அது மீளளிப்பு செய்யப்படாது.

16.4. அட்டை செல்லுபடியாகும் காலப்பகுதிக்கு அப்பால் அட்டையை உபயோகிப்பதற்கு அட்டை வாடிக்கையாளர் முயலக்கூடாது. அட்டையின் செல்லுபடி காலத்திற்கு அப்பால் அட்டையை உபயோகிக்க முயல்வதால் எழக்கூடிய எந்தவொரு விளைவுகளுக்கும் எக்காரணத்தைக் கொண்டும் வங்கி பொறுப்பேற்றுக் கொள்ளாது.

17. அட்டை வாடிக்கையாளருக்கும் வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் இடையிலான பிணக்குகள்

17.1. வர்த்தக நிறுவனத்திற்கு/நிதி நிறுவனத்திற்கு எதிரான எந்தவொரு முறைப்பாடும் அட்டை வாடிக்கையாளர் மற்றும் வர்த்தக நிறுவனம்/நிதி நிறுவனம் ஆகியோருக்கிடையில் நேரடியாக தீர்த்துவைக்கப்படல் வேண்டும். எந்தவொரு வர்த்தக நிறுவனத்திடமிருந்து/நிதி நிறுவனத்திடமிருந்து அட்டை வாடிக்கையாளர் அல்லது துணை அட்டை வாடிக்கையாளர் பெற்றுக்கொள்கின்ற எந்தவொரு பொருட்கள் அல்லது சேவைகளின் தரம் அல்லது பெறுமதிக்கு வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக் கொள்ளாது.

18. பிணக்குகள் மற்றும் தீர்வுகள்

18.1. கணக்கு கூற்றில் தவறு இடம்பெற்றுள்ளதாக அட்டை வாடிக்கையாளர் கருதினால் வங்கிக்கு முறையாக (கணக்கு கூற்று திகதியிலிருந்து 30 தினங்களுக்குள்) தொடர்பு கொள்ளுதல் வேண்டும். தேவையான விசாரணைகளுக்கு வங்கிக்கு உதவும் வகையில், பின்வரும் தகவல் விபரங்களை அட்டை வாடிக்கையாளர் வங்கியிடம் வழங்குதல் வேண்டும்: பெயர் மற்றும் அட்டை இலக்கம், விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை தொடர்பான விபரங்கள் மற்றும் தவறு இடம்பெற்றுள்ளதாக சந்தேகிக்கப்படும் தொகை.

18.2. அட்டை வாடிக்கையாளர் வாய்மூலமாக வங்கிக்கு அறிவிக்கும் பட்சத்தில் 5 அலுவலக தினங்களுக்குள் எழுத்து மூலமான முறைப்பாட்டை அனுப்பி வைத்தல் வேண்டும். வேறு ஏதாவது விபரங்கள் தேவைப்படும் பட்சத்தில் அட்டை வாடிக்கையாளரை வங்கி தொடர்பு கொள்ளும்.

18.3. வங்கியின் விசாரணை மற்றும் தவறைத் திருத்துதல் (அமையும் பட்சத்தில்) ஆகியன நிலுவையாக உள்ள போது வங்கி தனது தீர்மானத்திற்கு அமைவாக பிணக்கு தீர்க்கப்படும் வரையில் தவறு என முன்வைக்கப்பட்ட தொகையை கணக்கில் வரவு வைக்கக்கூடும். விசாரணைகள் பூர்த்தியடைந்த பின்னர் எவ்வித தவறும் இடம்பெறவில்லை என வங்கி உறுதி செய்தால் அதனை அட்டை வாடிக்கையாளருக்கு வங்கி உரிய முறையில் தெரியப்படுத்தும். தவறு என முன்வைக்கப்பட்ட தொகையை வங்கி உரிய திகதியில் அட்டை வாடிக்கையாளரின் கணக்கில் பற்றுச் செய்து உரிய வகையில் சேவைக் கட்டணங்களையும் அட்டுறு செய்யும். அட்டை வாடிக்கையாளரின் வேண்டுகோளின் பேரில் விசாரணையை முன்னெடுப்பதற்கு வவுச்சர் பிரதிகள் போன்ற ஆவணங்களை தனது ஆவண வைப்பகத்திலிருந்து அல்லது மற்றொரு வங்கியிடமிருந்து வங்கி பெற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டால், உரிய கட்டணங்கள் அட்டை வாடிக்கையாளரின் கணக்கில் பற்றுச் செய்யப்படும்.

19. முடிவுறுத்தல்

19.1. மேலே சரத்து 13 இன் கீழ் (கொடுப்பனவு மற்றும் கட்டணங்கள்) கொடுப்பனவுகளைச் செலுத்துகின்ற விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ள போதிலும், அட்டைக் கணக்கில் நிலுவையாக உள்ள அனைத்து தொகைகளும் (துணை அட்டைகள் உட்பட) மற்றும் அட்டையை உபயோகித்ததால் ஏற்பட்டுள்ள ஆனால் இன்னமும் அட்டை வாடிக்கையாளரின் கணக்கில் பற்றுச்செய்யப்படாத தொகைகளும் செலுத்த வேண்டிய தொகையாக அமைவதுடன், இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் உடனடியாக முழுமையாக செலுத்தப்படல் வேண்டும். அட்டையை(களை) இரண்டாக வெட்டி இணைத்து வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவித்தலை அட்டை வாடிக்கையாளர் விடுத்தாலோ அல்லது அட்டை வாடிக்கையாளரின் இறப்பு, திவால் அல்லது கடனை அடைக்க முடியாத பட்சத்திலோ அல்லது வங்கிக்கு தொடர்பில்லாத எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் அட்டை வாடிக்கையாளர் எங்கு இருக்கின்றார் என வங்கியால் அறிந்துகொள்ள முடியாத பட்சத்திலோ இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும். அட்டைக் கணக்கிலுள்ள எந்தவொரு நிலுவைத் தொகையையும் முழுமையாக மீளச் செலுத்தும் பொறுப்பை அட்டை வாடிக்கையாளர் மற்றும்/அல்லது அவரது ஆதனம் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியதுடன், அத்தகைய நிலுவையை மீள் அறவீடு செய்தற்காக ஏற்படுகின்ற அனைத்து செலவுகள் (சட்டக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அடங்கலாக) மற்றும் செலவினங்களுக்கான நட்டஈட்டை வங்கியிடம் கோர முடியாது. அத்தகைய மீள் கொடுப்பனவு செலுத்தப்படும் வரையில் அமுலில்

உள்ள வீதங்களில் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களை வங்கி தொடர்ந்தும் அறவிடும்.

19.2. பிரதான அட்டை வாடிக்கையாளர் தனது அட்டையை முடிவுறுத்தும் பட்சத்தில், அந்த பிரதான அட்டை வாடிக்கையாளர் மற்றும் துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) நிலுவையாக உள்ள அனைத்து தொகையும் மீளச் செலுத்தப்பட்டு அட்டைகள் இரண்டாக வெட்டப்பட்டு வங்கியிடம் முறையாக மீள ஒப்படைக்கப்படும் வரையில், அனைத்து கட்டணங்கள் மற்றும் ஏனைய பொறுப்புக்களுக்கு தொடர்ந்தும் கூட்டாகவும், தனித்தனியாகவும் வங்கிக்கு பொறுப்புக்கூறல் வேண்டும்.

19.3. எவ்விதமான காரணத்துடனேயோ அல்லது காரணமின்றியோ, முன்னறிவித்தலுடனோ அல்லது முன்னறிவித்தலின்றியோ எந்நேரமும் அட்டையை இரத்துச் செய்து அல்லது மறுத்து வங்கி இந்த ஒப்பந்தத்தை முடிவுக்கு கொண்டு வரலாம். அவ்வாறான முடிவுறுத்தல் இடம்பெறாத பட்சத்தில் காலத்திற்கு காலம் அட்டை வாடிக்கையாளருக்கு(களுக்கு) புதிய அட்டையை (புதுப்பித்தல்) வங்கி வழங்கக்கூடும்.

19.4. அட்டைக் கணக்கு முடிவுறுத்தலுக்கு கொண்டு வரப்படும் பட்சத்தில் வருடாந்த அங்கத்துவ கட்டணத்தை அல்லது அதன் ஒரு பாகத்தை மீளளிக்கும் பொறுப்பை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

19.5. அட்டையை விநியோகிப்பதற்கு உத்தரவாதமாக வங்கியால் கொள்ளப்பட்டுள்ள எந்தவொரு உத்தரவாத பிணை தொடர்பிலும், அட்டை வாடிக்கையாளர் அல்லது வங்கியால் அட்டை இரத்துச் செய்யப்பட்டு மீள ஒப்படைக்கப்பட்ட பின்னர் அல்லது இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்ட பின்னர், நிலுவையாக உள்ள தொகை முழுமையாக செலுத்தப்பட்டாலும், குறைந்த பட்சம் 45 தினங்களுக்கு உத்தரவாத பிணையை தொடர்ந்தும் தன் வசம் வைத்திருக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

19.6. இரு தரப்பினராலும் இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலும், இந்த அட்டையை உபயோகிப்பதால் ஏற்பட்ட அனைத்து மேலதிக கட்டணங்களுக்கும் அட்டை வாடிக்கையாளர் தொடர்ந்தும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

20. பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளல்

பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படுகின்ற எந்தவொரு இழப்பு அல்லது

சேதாரத்திற்கும் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ள மாட்டாது:

20.1. வங்கி அல்லது வர்த்தக ஸ்தாபனம் அல்லது ஏனைய வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது எந்தவொரு தன்னியக்க டெலர் இயந்திரம் அல்லது ஏனைய தரப்பு அட்டைக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைக்கு இடமளிக்க மறுப்பதால் அல்லது கடன் வரம்பு வரையான முற்பணத்தை வழங்க மறுப்பதாலோ அட்டை வாடிக்கையாளருக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு இழப்பு அல்லது சேதாரம்;;

20.2. எந்தவொரு வர்த்தக ஸ்தாபனம் அல்லது அங்கத்துவ ஸ்தாபனம் எந்தவொரு கொடுப்பனவு ஸ்தாபனமும் அட்டையை ஏற்றுக்கொள்ள மறுத்தல் அல்லது எந்தவொரு வர்த்தக ஸ்தாபனத்தாலும் அட்டை வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளில் எந்தவிதமான குறைபாடு அல்லது பற்றாக்குறையுடன் அட்டையை ஏற்றுக்கொள்ளல் அல்லது அட்டைக் கொடுக்கல்வாங்கலின் போது வர்த்தக ஸ்தாபனம் ஒன்றினால் எந்தவொரு மீறல் அல்லது அட்டை வசதி செயற்படாமை;

20.3. எந்தவொரு தன்னியக்க டெலர் இயந்திரம்/விற்பனை மைய இயந்திரம் தொழிற்படாமை அல்லது கோளாறு மற்றும்/அல்லது தொடர்பாடல் முறைமைகளின் செயலிழப்பு;

20.4. வங்கி அல்லது வேறு எந்த நபர் அல்லது தன்னியக்க டெலர் இயந்திரம்/விற்பனை மையத்தின் கோரிக்கைக்கு மற்றும் ஒப்படைத்தலுக்கு மற்றும்/அல்லது பெறப்படுவதற்கு அட்டையின் முகப்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள காலாவதி திகதி முடிவடைவதற்கு முன்பதாகவே அட்டையை கோருகின்ற அல்லது பெறுகின்ற உரிமையை நிலைநாட்டுதல்;

20.5. சரத்து 19 (முடிவுறுத்தல்) இற்கு அமைவாக எந்தவொரு அட்டையை அல்லது அட்டைக் கணக்கினை முடிவுறுத்தும் தனது உரிமையை வங்கி நிலைநாட்டுதல்;

20.6. அட்டையை மீளப் பெறுவது மற்றும் அதற்கும் அப்பால் அட்டை வாடிக்கையாளரின் பெயருக்கு அல்லது நன்மதிப்பிற்கு ஏற்பட்டுள்ள களங்கம், அதனை மீள ஒப்படைக்குமாறு விடுக்கப்படும் எந்தவொரு கோரிக்கை அல்லது அட்டையை ஏற்றுக்கொள்வதற்கு எவரும் மறுத்தல்;

20.7. சரத்து 22 இற்கு அமைவாக (வங்கியின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் வாடிக்கையாளர் தகவல் விபரம்) வங்கியால்

வெளிப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு விபரங்களிலும் தவறான கூற்று, தவறான உருவமைப்பு, தவறு அல்லது விடுபாடு;

20.8. அட்டை வாடிக்கையாளர் மற்றும் எந்தவொரு வர்த்தக ஸ்தாபனம் அல்லது வங்கி அல்லது நிதி நிறுவனம் அல்லது வேறு எந்தவொரு நபருக்கு இடையிலான எந்தவொரு பிணக்கும் அட்டை வாடிக்கையாளர் வங்கி மீது கொண்டுள்ள பொறுப்பிற்கு எவ்விதத்திலும் பாதிப்பாக அமையாததுடன், வர்த்தக ஸ்தாபனம் அல்லது வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு எதிராக அட்டை வாடிக்கையாளர் முன்வைக்கும் எந்தவொரு பிணக்கு அல்லது இழப்பீட்டுக் கோரலையும் நிவர்த்தி செய்யுமாறு வங்கியிடம் கோர முடியாது.

20.9. இயற்கையின் செயற்பாடுகள், கலவரங்கள், உள்நாட்டு கலகங்கள், அரசாங்கத்திற்கு எதிரான புரட்சிகள், போர்கள் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறு எந்தவொரு காரணங்கள், அல்லது எந்தவொரு வேலை நிறுத்தங்கள் அல்லது முற்றுகைகள் காரணமாக எழுகின்ற விளைவுகள் மற்றும் இடையூறுகள்.

21. நிறுவன அட்டைகளின் பொறுப்பு

தகுதி வாய்ந்த நிறுவனங்களின் சார்பில் அவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு பணியாளர், அதிகாரிகள், பணிப்பாளர்கள் அல்லது வேறு எந்தவொரு நபரின் பெயரில் விநியோகிக்கப்படுகின்ற அனைத்து அட்டைகளும் அந்நிறுவனம் மற்றும் அட்டை வாடிக்கையாளர் ஆகியோர் கூட்டு மற்றும் தனித்தனி பொறுப்புக்களுடன் இயங்கும்.

22. வங்கியின் புத்தகங்கள், ஆவணப் பதிவுகள் மற்றும் வாடிக்கையாளர் தகவல் விபரம்

22.1. வங்கியின் புத்தகங்கள், ஆவணப் பதிவுகள் மற்றும் கணக்குகள் உறுதியானவை மற்றும் கட்டுப்படுபவை. வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற எந்தவொரு சான்றிதழ், அச்சுப்பிரதி அல்லது கணக்கு கூற்று இறுதியானதும், உறுதியானதாகவும் அமைவதுடன், எந்தவொரு சட்ட நடவடிக்கைகள் அல்லது வேறு தேவைப்பாடுகளுக்கு அட்டை வாடிக்கையாளர்களுக்கு எதிரான சரியான ஆவண சான்றுகளாக கருதப்படும்.

22.2. வாடிக்கையாளர் மற்றும் வங்கியின் நலன்களைப் பாதுகாப்பதற்கு வங்கிக்கும் அட்டை வாடிக்கையாளர்களுக்கும் இடையிலான தொலைபேசி அழைப்புக்கள் பதிவு செய்யப்படலாம் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்வதுடன், ஏற்றுக்கொள்கின்றார்.

22.3. வங்கியானது தனது தரவு, தகவல் விபரம் மற்றும் ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்தில், அல்லது புத்தகங்கள் (மைக்ரோ.ஃபிலிம்) அல்லது ஏனைய வழிமுறைகளில் (இலங்கைக்கு வெளியிலுள்ள நடைமுறைப்படுத்தல் மையங்கள் மற்றும் தரவுத்தளங்கள் அடங்கலாக) வங்கி பேணக்கூடும் என்பதை அட்டை வாடிக்கையாளர் இத்தால் ஒப்புக்கொண்டு, ஏற்றுக்கொள்வதுடன், செய்திகள், கேபிள்கள், தொலைநகல்கள், புத்தகங்கள் (மைக்ரோ.ஃபிலிம்கள்), நாடாக்கள், கணினி அச்சுப்பிரதிகள் மற்றும் புகைப்படப் பிரதிகள் என தனது ஆவணங்கள், புத்தகங்கள், பதிவுகள் அல்லது கணக்குகள் போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்டு வங்கியால் காண்பிக்கப்படுகின்ற சான்றுகள் உண்மையானவையும், உறுதியானவையும் என கருதப்படுகின்றன.

22.4. மூன்றாம் தரப்பு ஒப்பந்தகாரர்களை தனது சேவைகளுக்கு வங்கி உபயோகப்படுத்தலாம் என்பதை அட்டை வாடிக்கையாளர்கள் ஒப்புக்கொண்டு, ஏற்றுக்கொள்வதுடன், அத்தகைய மூன்றாம் தரப்பினர் அட்டை வாடிக்கையாளர் மற்றும் அட்டைக் கணக்கு தொடர்பான விபரங்கள் அடங்கலாக வங்கியின் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கக்கூடும்.

22.5. வாடிக்கையாளர் வங்கியுடன் கொண்டுள்ள உறவுமுறை தொடர்பில் (நிலுவையாக உள்ள தொகைகள், கணக்கின் வரலாறு மற்றும் அட்டை வாடிக்கையாளர் தொடர்பான ஏனைய தகவல் விபரங்கள் அடங்கலாக), வங்கியின் வேறு எந்த கிளை அல்லது அலுவலகத்திற்கு, வங்கியுடன் தொடர்புபட்ட ஏனைய தரப்பிற்கு அல்லது வங்கியின் எந்தவொரு அங்கத்துவ நிறுவனத்திற்கு, நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக எந்தவொரு ஒழுக்காற்று அதிகார சபைக்கும், இலங்கையிலோ அல்லது வேறு எங்குமோ, வங்கியால் நியமிக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ள எந்தவொரு தரப்பிற்கும், எந்தவொரு உத்தரவாதமளித்தவர், மூன்றாம் தரப்பு அல்லது பிணை வழங்குனருக்கு, மேற்கோள் தொடர்பில் எந்தவொரு மூன்றாம் தரப்பு விடுத்துள்ள கோரிக்கைக்கு பதிலளிப்பதற்கு, மற்றும் வங்கியின் தொழில்சார் ஆலோசகர்கள், முகவர்கள் மற்றும் சுயாதீன ஒப்பந்தகாரர்கள் ஆகியோருக்கு வங்கி வெளிப்படுத்தி மற்றும் அறிவிக்கக்கூடும் என்பதற்கு அட்டை வாடிக்கையாளர் ஒப்புதல் அளிக்கின்றார். அத்தகைய வெளிப்படுத்தல் அல்லது அறிவிப்பு காரணமாக ஏற்படுகின்ற எவ்விதமான இழப்பு, சேதாரம், அல்லது ஏற்பட்ட பாதிப்பு அல்லது கோரலுக்கு வங்கிக்கு எதிராக எவ்விதமான நட்ட ஈட்டையோ அல்லது அவ்வாறு கோரும் உரிமையோ தனக்கு கிடையாது என்பதையும் வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். வங்கியில் தொடர்ந்து அட்டையைக் கொண்டிருக்காவிட்டாலும் இந்த ஒப்புதல் அட்டை வாடிக்கையாளருக்கு(களுக்கு) பொருந்தும்.

22.6. வங்கி தனது வாடிக்கையாளருக்கு அறிவிக்காது தான் தீர்மானிக்கும் சந்தர்ப்பங்களில் அட்டைக்கு விண்ணப்பித்தவரின் கடன் நிலவரம் மற்றும்/அல்லது அட்டை வாடிக்கையாளரின் கடன் நிலவரத்தை சோதித்து அறிந்து கொள்ளும் உரிமையை கொண்டுள்ளது.

22.7. வாடிக்கையாளர்/வாடிக்கையாளரது வர்த்தக செயற்பாடுகள், வங்கியில் அல்லது ஏனைய குழும அங்கத்துவ நிறுவனத்தில் பேணப்பட்டுள்ள கணக்கு அல்லது வங்கியுடன் அல்லது ஏனைய குழும அங்கத்துவ நிறுவனத்துடன் வாடிக்கையாளரின்/வாடிக்கையாளரின் உறவுமுறை தொடர்பான விபரங்கள் அடங்கலாக அட்டைக் கணக்குகள் தொடர்பான விபரங்களை வங்கி மற்றும்/அல்லது அதன் அலுவலர்கள்/ஊழியர்கள் பின்வரும் எந்தவொரு காரணத்திற்காகவும் வெளிப்படுத்தும் உரிமையைக் கொண்டுள்ளனர்.

20.7.1 வங்கியின் எந்தவொரு கிளை அல்லது குழுமத்தின் மற்றுமொரு அங்கத்துவ நிறுவனம்

20.7.2 வங்கி அல்லது குழுமத்தின் மற்றுமொரு அங்கத்துவ நிறுவனத்திற்கு மேலான அதிகாரத்தைக் கொண்டுள்ள எந்தவொரு ஒழுக்காற்று, மேற்பார்வை, அரச அதிகார சபை;

20.7.3 அத்தகைய வெளிப்படுத்தலுக்கான சட்ட அங்கீகாரத்தை அல்லது நீதிமன்ற உத்தரவைக் கொண்டுள்ள எந்தவொரு நபர்;

20.7.4 வங்கியின் இரகசியத்தன்மையின் கடமைக்கு கீழ்ப்பட்ட எந்தவொரு நபர்.

23. தொலைபேசி, தந்தி, கேபிள், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அதிகாரம் வழங்குதல் மற்றும் முன் காப்பீடு

23.1. அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்கின்ற நேரத்தில் உள்ள சூழ்நிலைகளில் எவ்விதத்திலும் தங்கியிராது, அறிவுறுத்தல்களை வழங்கும் நபரின் அதிகாரம் அல்லது அடையாளம் தொடர்பில் பாரபட்சமின்றி, வங்கியின் தரப்பின் மீது எவ்விதமான விசாரணையும் இல்லாமல், அட்டை வாடிக்கையாளர்(கள்) தன(ம)து சார்பில் காலத்திற்கு காலம் தொலைபேசி, கேபிள், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக வழங்குகின்ற எவ்விதமான அறிவித்தல், கட்டளை, கோரல் அல்லது ஏனைய தொடர்பாடல் ("அறிவுறுத்தல்கள்" ) ஆகியவற்றில் வங்கி நம்பிக்கை கொண்டு அதற்கமைவாக செயற்படுவதற்கு அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார். அறிவுறுத்தல்களை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் நேரம் மற்றும் திகதி மற்றும் மின்னஞ்சல்

கிடைக்கப்பெறும் திகதி மற்றும் நேரம் ஆகியவை இறுதியான தீர்மானத்தை வங்கி மேற்கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளும் ஆவணம் மற்றும் கால நேரம் என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

23.2. அறிவுறுத்தல்களை முழுமையாக அதிகாரம் கொண்டவை மற்றும் அட்டை வாடிக்கையாளருக்கு கட்டுப்பட்டவை என்பதை கருத்தில் கொள்ளும் உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன், பணத்தை செலுத்துவதற்கான அறிவுறுத்தல் அல்லது எந்தவொரு கணக்கிற்கும் வரவு வைக்கும் அல்லது பற்றுச் செய்தல், எந்தவொரு பணம் அல்லது ஆவணங்களை வைப்புச் செய்தல், அல்லது எந்தவொரு ஒப்பந்தத்திற்கும் அட்டை வாடிக்கையாளரைப் பிணைத்தல், அல்லது வங்கியுடனான அல்லது வேறு எந்த நபருடனான ஏனைய ஏற்பாடுகள் அல்லது வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை அல்லது ஏற்பாடுகள் தொடர்பில் அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள கடப்பாடு அல்லது அறிவுறுத்தல்கள் தொடர்பில் எவ்விதமான தவறு, சந்தேகம், தப்பபிப்பிராயம் அல்லது போதிய தெளிவின்மை ஆகியவற்றுக்கு அப்பால் பணம் தொடர்பான நடவடிக்கை ஆகியவற்றை முன்னெடுப்பதற்கு வங்கியானது தனக்கு கிடைக்கப்பெறும் அறிவுறுத்தல்களிலேயே தங்கியுள்ளது என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

23.3. இந்த அதிகாரத்தின் விதிமுறைகளுக்கு இணங்க வங்கி செயற்படுவதை கருதுகையில், அறிவுறுத்தல்கள் தொடர்பாக எழுகின்ற அல்லது எவ்விதமான மீறல் காரணமாக அல்லது வங்கி தனது உரிமைகளை நிலைநாட்டும் வகையில் அமுல்படுத்தல் நடவடிக்கை காரணமாக சட்டரீதியதாக அல்லது வேறு எவ்வகையிலும் வங்கிக்கு ஏற்படுகின்ற அனைத்து இழப்புக்கள், கோரல்கள், நடவடிக்கைகள், சட்ட நடவடிக்கைகள், அதிகார கோரல்கள், சேதாரங்கள், செலவுகள், பொறுப்பு மற்றும் செலவினங்கள் ஆகியவற்றுக்கு எதிராக வங்கிக்கு நட்ட ஈட்டைச் செலுத்துவதற்கு அட்டை வாடிக்கையாளர் இத்தால் உறுதியாக ஏற்றுக்கொள்கின்றார். மேற்குறிப்பட்ட அனைத்து செலவுகள் மற்றும் செலவினங்கள் அட்டைக் கணக்கிற்கு பற்றுச் செய்யப்படுவதுடன், அட்டை வாடிக்கையாளரால் செலுத்தப்படல் வேண்டும்.

23.4. இந்த அதிகாரமளிப்பு மற்றும் நட்டஈட்டிற்கான முன்காப்பீடு தொடர்பான விதிமுறைகள் அனைத்தும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு நியாயமான கால அவகாசத்துடன் அட்டை வாடிக்கையாளரிடமிருந்து முடிவுறுத்தல் தொடர்பான கிடைக்கும் அறிவித்தல் வங்கிக்கு கிடைக்கப்பெறும் வரை முழுமையாக நடைமுறையில் இருப்பதுடன், அமுல்படுத்தப்படும்.

மேலும், அத்தகைய முடிவுறுத்தல் அறிவிப்பானது கிடைக்கப்பெறுவதற்கு முன்னால் இந்த அதிகாரம் வழங்குதல் மற்றும் முன் காப்பீடு தொடர்பான விதிமுறைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட எந்த செயற்பாட்டிற்கும் அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

23.5. மேற்குறிப்பிட்டவாறு தொலைபேசி, கேபிள், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் வாயிலாக வழங்கப்படும் எந்தவொரு அறிவுறுத்தலும் வங்கிக்கு அறிவுறுத்தலை வழங்கும் பாதுகாப்பான வழிமுறை கிடையாது என்பதையும், இது தொடர்பான ஆபத்துக்களை தான் அறிந்துள்ளேன் என்பதையும், இந்த ஏற்பாடு அட்டை வாடிக்கையாளருக்கு சௌகரியத்தை வழங்குவதற்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும், ஆபத்துக்களுக்கு முற்றுமுழுதாக அட்டை வாடிக்கையாளரே பொறுப்பு என்பதையும் அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொண்டு, ஒப்புதல் அளிக்கின்றார்.

24. எதிரீடு செய்யும் உரிமை மற்றும் பிணையாக உள்ள தொகை

24.1. எதிரீடு செய்வதற்கான எந்தவொரு பொதுவான உரிமை அல்லது சட்டத்தின் அல்லது வேறு எந்த ஒப்பந்தத்தின் கீழான ஏனைய உரிமைகள் ஆகியவற்றிற்குப் புறம்பாக, வங்கி எவ்வேளையிலும் எவ்விதமான முன்னறிவிப்புமின்றி தனது முழுமையான தீர்மானத்திற்கு அமைவாக எந்தவொரு விவரணத்துடனும் எந்த கிளையிலும் இலங்கை ரூபாவில் அல்லது வேறு எந்த நாணயத்திலும் வங்கியில் அட்டை வாடிக்கையாளர் தனியாகவோ அல்லது கூட்டாகவோ கொண்டுள்ள அனைத்து அல்லது எந்தவொரு கணக்கினை(குகளை) இணைத்து அல்லது கூட்டாக எதிரீடு செய்வதற்கு அல்லது துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) உடனான கூட்டுக் கணக்கு அடங்கலாக அத்தகைய கணக்கில்(குகளில்) வரவு மீதியாக உள்ள தொகையை மாற்றம் செய்து எந்தவொரு விவரணத்துடனும் எந்த கிளையிலும் இலங்கை ரூபாவில் அல்லது வேறு எந்த நாணயத்திலும் வங்கியில் அட்டை வாடிக்கையாளர் கொண்டுள்ள அனைத்து கணக்கிலும்(களிலும்) உள்ள நிலுவையை எதிரீடு செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளது என்பதை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார். வங்கியின் முழுமையான தீர்மானத்திற்கு அமைவாக வங்கியில் நிலவுகின்ற நாணய மாற்று வீதங்களில் தேவையான எதிரீடு அல்லது மாற்றத்தை மேற்கொண்டு அத்தகைய இணைப்பு அல்லது கூட்டு கணக்கினை வங்கி எதிரீடு செய்வதற்கு அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு இத்தால் அதிகாரம் அளிக்கின்றார்.

24.2. அட்டை வாடிக்கையாளரின் திவால் அல்லது கடனை அடைக்க முடியாத நிலை ஏற்படுவது நிரூபிக்கப்பட்டால் அல்லது சாசனம்

அல்லது நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டால் அல்லது ஏனைய காரணங்களால் வங்கிக்கு யூகம் ஏற்பட்டால் அட்டை வாடிக்கையாளர் அடங்கலாக எந்தவொரு தரப்பினதும் பொறுப்பினை வங்கி நிலைநாட்டுவதற்கு இடமளிக்கும் தேவைப்பாடாக, வங்கியில் உள்ள பிணை உத்தரவாதத்தை வங்கி தொடர்ந்தும் தக்கவைப்பதுடன், வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை அல்லது அதில் ஒரு பாகத்தை ஈடு செய்வதற்கு வங்கி அட்டை வாடிக்கையாளரின் வேறு எந்தவொரு பிணை அல்லது உத்தரவாத வைப்பினை பயன்படுத்தும்.

24.3. கடனட்டையை வழங்கும் போது பிணை உத்தரவாதமாக எமது எந்தவொரு கிளையிலும் வைப்புக் கணக்கொன்றில் வைப்பினை இடுமாறு வங்கி அட்டை வாடிக்கையாளரைக் கோர முடியும். அட்டையில் நிலுவையாக உள்ள எந்தவொரு தொகையையும் அறவிடுவதற்கு வங்கி இந்த வைப்புத் தொகையை உபயோகிக்கும் உரிமையைக் கொண்டுள்ளது. இந்த வைப்புத்தொகையை அட்டை வாடிக்கையாளர் எந்நேரமும் உபயோகிக்க விரும்பின், முற்கூட்டியே வங்கிக்கு அறிவிக்க வேண்டியதுடன், அட்டை வாடிக்கையாளரின் கடனட்டை செயற்பாடுகளின் நடத்தையின் அடிப்படையில் வங்கி முற்றிலும் தனது தீர்மானத்திற்கு அமைவாக தீர்மானமொன்றை எடுக்கும். அவ்வாறு பிணை வைப்புத்தொகையாக உள்ள பணத்தை உபயோகிப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் அதனை வெளியிடுவதற்கு மூன்று (3) அலுவலக தினங்கள் வரை செல்லலாம்.

25. சட்ட நடவடிக்கை

எந்தவொரு காரணத்தை முன்னிட்டும் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அட்டை வாடிக்கையாளர் கட்டுப்படத் தவறும் பட்சத்தில், இந்த அட்டை வாடிக்கையாளர் ஒப்பந்தத்தை வங்கி முடிவுறுத்துவதுடன், இதன் கீழ் நிலுவையாக உள்ள தொகையை அறவீடு செய்வதற்கான சட்ட நடவடிக்கையை எடுக்கும். முழுமையான நட்டஈட்டின் அடிப்படையில் சட்டக் கட்டணங்கள் அடங்கலாக வங்கிக்கு ஏற்படும் அனைத்து செலவுகள், அறவீடுகள் மற்றும் செலவினங்களை அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

26. அறிவித்தல்கள்

26.1. பெயர், தொழில் அல்லது வர்த்தகம் அல்லது முகவரி (அலுவலகம் மற்றும்/அல்லது வதிவிடம்) எந்தவொரு மாற்றமும் இடம்பெறும் பட்சத்தில் உரிய தொலைபேசி இலக்கங்களையும் குறிப்பிட்டு அது தொடர்பில் வங்கியின் அட்டை மையத்திற்கு அட்டை வாடிக்கையாளர் உரிய முறையில் எழுத்து மூலமாக அறியத்தருதல் வேண்டும்.

26.2. அனைத்து அட்டைகள், தனிப்பட்ட அடையாள இலக்க கணக்கு கூற்று, அதிகார கோரல்கள் அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழான ஏனைய எந்தவொரு தொடர்பாடலும் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு அல்லது அட்டை வாடிக்கையாளரின் வேறு எந்த முகவரிக்கும் தனிப்பட்டரீதியில் விநியோகிக்கப்படலாம் அல்லது விநியோக சேவை மூலமாக அல்லது சாதாரண தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படலாம். தனிப்பட்டரீதியில் விநியோகிக்கப்பட்ட தினத்தில் விநியோக சேவை அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு மூன்று (3) அலுவலக தினங்களின் பின்னர் அத்தகைய தொடர்பாடல் அறிவித்தல் அட்டை வாடிக்கையாளரை எட்டியுள்ளது என்றே கருதப்படும்.

26.3. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் பிரதான அட்டை வாடிக்கையாளருக்கு மற்றும்/அல்லது துணை அட்டை வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற அனைத்து தொடர்பாடல்களும் இரு தரப்பிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள தொடர்பாடல்களாகவே கருதப்படும்.

26.4. வங்கி மற்றும் அதன் உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பான அனைத்து சந்தைப்படுத்தல் விளம்பர தகவல்களும் மின்னஞ்சல், குறுஞ்செய்திச் சேவை (எஸ்எம்எஸ்), தொலைநகல், தபால், தொலைபேசி போன்றவற்றின் ஊடாக பெற்றுக்கொள்வதற்கு அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார்.

27. பொதுவானவை

27.1. அட்டை வாடிக்கையாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நல்லெண்ணத்துடன் செயற்படும் பொறுப்பை வங்கி ஏற்றுக்கொள்ளாது.

27.2. அத்தகைய அறிவுறுத்தல் எதனையும் பதிவு செய்து நீதிமன்றத்தில் அல்லது சட்ட நடவடிக்கைகளின் போது ஆதாரமாக அத்தகைய பதிவுகளை உபயோகிப்பதற்கு வங்கி தனது தீர்மானத்திற்கு அமைவாக முடிவெடுக்கலாம் என்ற அதிகாரத்தை அட்டை வாடிக்கையாளர் வங்கிக்கு வழங்குகின்றார்.

27.3. இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வாடிக்கையாளரிடமிருந்து வங்கிக்கு கிடைக்கவேண்டிய முழுத் தொகையையும் சேகரிப்பதற்கு முகவர் ஒருவரை நியமிக்கும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

27.4. அட்டை வாடிக்கையாளருக்கு அறிவித்தோ அல்லது அறிவிக்காமலோ இந்த ஒப்பந்தத்தின் கீழ் தனது உரிமைகள் அல்லது கடப்பாடுகளை முழுமையாக அல்லது பகுதியளவில் வேறு தரப்பிற்கு மாற்றம் செய்யும் உரிமையை அட்டை வாடிக்கையாளரின்

ஒப்புதலின்றி எந்நேரமும் மேற்கொள்ளும் அதிகாரத்தை வங்கி கொண்டுள்ளது.

27.5. காலத்திற்கு காலம் வங்கியால் கோரப்படும் சமயங்களில் இத்தகைய வேறு ஆவணத்தில்(களில்) கையொப்பம் இடும் கடப்பாட்டை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

27.6. இங்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் தீர்வுகள் சட்டத்தினால் வழங்கப்படும் எந்தவொரு உரிமைகள் அல்லது தீர்வுகளை பிரத்தியேகமாக கொண்டிராது ஒட்டுமொத்தமானவையாகும்.

27.8. இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அட்டை வாடிக்கையாளர் கட்டுப்பட வேண்டியதுடன், அவர் தனது கடப்பாடுகளை வேறு எவருக்கும் கைமாற்றம் செய்ய முடியாது.

27.9. வங்கி எப்போது வேண்டுமானாலும் இந்த விதிமுறைகள் அல்லது நிபந்தனைகள் ஏதேனையும் அல்லது செலுத்த தவறும் தொகையையும் அல்லது அட்டை வாடிக்கையாளரின் பொறுப்பு மீறலையும் நிபந்தனையின்றியோ அல்லது நிபந்தனையுடனேயோ விலக்களிக்கும் உரிமையைக் கொண்டுள்ளதுடன், அத்தகைய விலக்களிப்பு வங்கியால் எழுத்து மூலமாக வழங்கப்படுவதுடன், அதை வங்கியின் அலட்சியம் அல்லது கட்டுப்பாடின்மை காரணமாக அல்லது வேறு எந்தவொரு மீறல் காரணமாக அல்லது இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வங்கி மீறியுள்ளதாலேயே விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது என அர்த்தப்படுத்தாது, வங்கி தனது தீர்மானத்திற்கு அமைவாகவே அதனை எழுத்து மூலமாக வழங்கும். வழங்கப்படும் அத்தகைய விலக்களிப்புக்கள் குறிப்பிட்ட விடயத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பாக கருதப்பட வேண்டியதுடன், ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பாக பொதுவாக கருத முடியாது.

27.10. குறித்த வர்த்தக ஸ்தாபனங்கள் வழங்கும் விசேட தள்ளுபடிகள்/சலுகைகள் தொடர்பில் வங்கி எவ்விதமான உத்தரவாதத்தையும் வழங்காததுடன், விநியோகம், தரம், வடிவமைப்பு, வகைக் குறிப்புக்கள் அல்லது அந்த சலுகைகளில் குறிப்பிட்ட ஏனைய அம்சங்களுக்கான எவ்விதமான பிரதிநிதித்துவத்தையும் வங்கி ஏற்காது. மேலும், இந்த உற்பத்திகள்/சேவைகள் கிடைப்பதைப் பொறுத்ததுடன் முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

27.11. குறித்த வர்த்தக ஸ்தாபனங்கள் வழங்கும் விசேட தள்ளுபடிகள்/சலுகைகள் தொடர்பில் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்றுக்கொள்ளாது.

27.12. வங்கியால் அனுப்பப்படுகின்ற தபால்கள் விநியோகிக்கப்படாது மீளத் திரும்புவதுடன், அட்டை வாடிக்கையாளரை தொடர்புகொள்ள முடியாமல் உள்ள சமயத்தில் விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய முகவரிக்கு அட்டை வாடிக்கையாளரின் கூற்றுக்களை மற்றும்/அல்லது கடிதங்களை அனுப்பி வைக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

27.13. எவ்விதமான கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை/கள் தொடர்பில் அட்டை வாடிக்கையாளரால் பிணக்கு எழுப்பப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அத்தகைய பிணக்குகளை வங்கி விசாரணைக்கு உட்படுத்தும். எனினும், சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள அல்லது விசாரணைகளுக்கு வங்கிக்கு உதவுவதற்காக வங்கிக்கு வருகை தராமல் அல்லது கண்காணிப்பு கமெரா மற்றும் ஏனைய சான்றுகளை பார்க்க விரும்பாத பட்சத்தில் அல்லது விசாரணை தொடர்பான வர்த்தக ஸ்தாபனத்திற்கு அல்லது தன்னியக்க டெலர் இயந்திரங்களுக்கு அட்டை வாடிக்கையாளர் வருகை தர விரும்பாவிட்டால் அவ்வாறு பிணக்கிற்கு உட்படுத்தப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் அனைத்திற்கும் அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டி ஏற்படும்.

28. விதிமுறைகளில் மாறுபாடு

28.1. காலத்திற்கு காலம் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் வங்கியால் மாற்றங்கள் கொண்டு வரப்படலாம். சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அத்தகைய மாற்றங்கள் தொடர்பான அறிவித்தல் வங்கியால் எழுத்து மூலமாக அல்லது பத்திரிகை பொது வெளியீட்டின் மூலமாக அட்டை வாடிக்கையாளருக்கு அறியத்தரப்படும். அத்தகைய மாற்றங்கள் அனைத்து செலுத்தப்படாத கடன் கட்டணங்கள், அறவீடுகள், முற்பணங்கள், செலவுகள் மற்றும் அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.

28.2. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அத்தகைய மாற்றங்கள் ஏற்பட்ட திகதியின் பின்னர் அட்டையை தொடர்ந்தும் வைத்திருப்பது அல்லது உபயோகிப்பது அட்டை வாடிக்கையாளர் அத்தகைய மாற்றங்களை ஏற்றுக்கொண்டதாகவே கருதப்படும். பிரஸ்தாபிக்கப்பட்ட மாற்றத்தை அட்டை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்வில்லை எனில் அது அமுலுக்கு வரும் திகதிக்கு

முன்பதாக இங்கு சரத்து 19 (முடிவுறுத்தல்) இற்கு அமைவாக அட்டையின் உபயோகத்தை முடிவுறுத்துவது தொடர்பில் அட்டை வாடிக்கையாளர் எழுத்து மூலமான அறிவித்தலை வழங்க வேண்டும்.

29. உடன்படிக்கையின் விளைவுகள்

29.1. இந்த ஒப்பந்தத்தின் முடிவுறுத்தலுக்கு அப்பால் இதன் கீழ் அட்டை வாடிக்கையாளர் மற்றும் எந்தவொரு துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) கொண்டுள்ள பொறுப்புக்கள் ஆகியவற்றுக்கு அட்டை வாடிக்கையாளர் மற்றும் எந்தவொரு துணை அட்டை வாடிக்கையாளர்(கள்) தொடர்ந்தும் பொறுப்பேற்கும் வகையில் அமுலில் இருக்கும்.

29.2. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஒவ்வொன்றும் வெவ்வேறானவையும் ஒன்றிலிருந்து மற்றொன்று தனித்துவமானவையாகவும் உள்ளதுடன், இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எப்போதும் எதுவும் செல்லுபடியற்றதாகவோ, சட்டவிரோதமானதாகவோ அல்லது அமுலாக்கம் செய்யப்பட முடியாததாகவோ அமையின் ஏனைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் செல்லுபடி, சட்டபூர்வம் மற்றும் அமுலாக்கத்தில் எவ்விதமான குறைபாடுகளுமின்றி தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

30. அட்டை வாடிக்கையாளர் வெளிநாட்டிற்குச் செல்லுதல்

அட்டை வாடிக்கையாளர் ஒருவர் இலங்கையை விட்டு புலம் பெயரும் போது அல்லது தொழில்வாய்ப்பிற்காக வெளிநாடு செல்லும் போது வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதுடன் பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்றும் பட்டியலில் இன்னமும் சேர்க்கப்படாத கட்டணங்களை செலுத்த வேண்டியதுடன், அட்டை வாடிக்கையாளர் நாட்டை விட்டு செல்வதற்கு முப்பது (30) தினங்களுக்கு முன்பதாக அட்டை மற்றும் எந்தவொரு துணை அட்டைகளையும் வங்கியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும். அட்டை மற்றும் துணை அட்டையின்(களின்) பாவனை முடிவுறுத்தப்பட்டுள்ளதாக கருதப்படுவதுடன் சரத்து 19 (முடிவுறுத்தல்) விதி அமுலாக்கப்படும். உள்வரும் பணப்பரிமாற்றங்கள் மூலமாக அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கு தவிர்ந்த ஏனைய கணக்குகளைக் கொண்டுள்ளவர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அட்டைகளுக்கு இது பொருந்துகின்றது.

31. வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான அட்டைகள்

இலங்கை மத்திய வங்கி மற்றும் ஏனைய எந்தவொரு ஒழுக்காற்று அதிகார சபையாலும் விநியோகிக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளின் கீழ் வெளிநாட்டு பிரஜை ஒருவருக்கு அட்டை விநியோகிக்கப்படுவதுடன், அவர் நாட்டை விட்டு நிரந்தரமாக திரும்பிச் செல்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாக மற்றும்/அல்லது அவரது வதிவிட வீசா காலாவதியாகுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பதாக அது தொடர்பில் வங்கிக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும். அவர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள மற்றும் இன்னமும் சேர்க்கப்படாதுள்ள மொத்த தொகையையும் செலுத்துவதுடன், மேற்குறிப்பிட்ட எந்தவொரு நிகழ்வின் பின்னர் அட்டையை(களை) வங்கியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும்.

32. வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் நாணய மாற்று கட்டணம்

இலங்கை ரூபா தவிர்ந்த ஏனைய நாணயங்களில் மேற்கொள்ளப்படும் அட்டை கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் நாணய மாற்று இடம்பெறும் திகதியில் உரிய கொடுப்பனவு அட்டை நிறுவனத்தால் விதிக்கப்படும் நாணய மாற்று வீதத்தின் தீர்மானத்திற்கு ஏற்ப இலங்கை ரூபாவுக்கு மாற்றம் செய்யப்பட்டு அட்டைக் கணக்கில் பற்றுச் செய்யப்படுவதுடன், வங்கியால் மேலதிக வீதமும் வங்கி மீது உரிய கொடுப்பனவு அட்டை நிறுவனம் அறவிடுகின்ற எந்தவொரு கொடுக்கல்வாங்கல் நடவடிக்கை கட்டணமும்(ங்களும்) வங்கியால் அட்டைக் கணக்கில் பற்றுச் செய்யப்படும்.

33. சட்ட அதிகாரம்

33.1. விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கையின் சட்டங்களுக்கு உட்பட்டவையாக அதிகாரத்தைக் கொண்டுள்ளதுடன், இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்பிற்கு கட்டுப்படும் சம்மதத்தை அட்டை வாடிக்கையாளர் இத்தால் அளிக்கின்றார். மேலும் அட்டை வாடிக்கையாளருக்கு எதிரான வேறு எந்த சட்ட நடவடிக்கையை வங்கி முன்னெடுப்பதற்கு அத்தகைய சம்மதம் எவ்விதத்திலும் தடையாக அமையாது.

33.2. இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் சட்டம், அரசாங்க விதிமுறைகள் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அல்லது ஏனைய உரிய ஒழுக்காற்று அதிகார சபையால் விடுக்கப்படுகின்ற பணிப்புரைகள் காரணமாக ஏற்படுகின்ற திருத்தங்களுக்கு தானாகவே கட்டுப்படுகின்றன. சட்டரீதியான மற்றும் செல்லுபடியாகும் நோக்கங்களுக்கு மாத்திரமே அட்டையை உபயோகிக்க முடியும். மூன்றாம் தரப்பினர் ஒருவர் தனது அட்டையை அல்லது அட்டைக்

கணக்கினை எந்தவொரு நோக்கத்திற்காகவும் உபயோகிப்பதற்கு அட்டை வாடிக்கையாளர் அனுமதிக்கும் அல்லது இடமளிக்கும் பட்சத்தில் அத்தகைய உபயோகத்திற்கு அட்டை வாடிக்கையாளரே பொறுப்பேற்பதுடன், அத்தகைய உபயோகத்தினால் ஏற்படுகின்ற அனைத்து தொகைகள் மற்றும்/அல்லது செலவினங்களை வங்கிக்கு அல்லது உரிய கொடுப்பனவு அட்டை நிறுவனத்திற்கு செலுத்தும் பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய நிலைமைகளின் போது கொடுப்பனவுகளை உடனடியாக இடைநிறுத்தம் செய்யும் உரிமையை வங்கி கொண்டுள்ளதுடன், அந்நிய செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் கவனத்திற்கும் ஏனைய உரிய ஒழுக்காற்று சபையின் கவனத்திற்கும் இவ்விடயத்தை வங்கி கொண்டு வரும்.

33.3. அட்டை மூலமாக அனுமதியற்ற வெளிநாட்டு நாணயக் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகள் இடம்பெறுவதாக வங்கி சந்தேகிக்கும் பட்சத்தில் அல்லது நியாயமான காரணங்கள் எழுகின்ற பட்சத்தில் அட்டையில் கிடைக்கின்ற வெளிநாட்டு நாணயத் தொகையை உடனடியாக இடைநிறுத்தம் செய்யும் உரிமையை வங்கி கொண்டள்ளதுடன், அந்நிய செலாவணித் திணைக்களப் பணிப்பாளரின் கவனத்திற்கும் ஏனைய உரிய ஒழுக்காற்று சபையின் கவனத்திற்கும் இவ்விடயத்தை வங்கி கொண்டு வரும். அட்டை மூலமாக வெளிநாட்டு நாணயத்தில் அட்டை வாடிக்கையாளர் மேற்கொண்டுள்ள கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்களை பெற்றுக்கொள்ளும் உரிமையையும் வங்கி கொண்டுள்ளது.

33.4. அட்டை வாடிக்கையாளர் இலங்கை விட்டு செல்லும் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்லும் சமயத்தில் வங்கியால் விநியோகிக்கப்பட்டுள்ள அட்டையை வங்கியிடம் மீள ஒப்படைத்தல் வேண்டும். தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள வைப்புத் தொகைக்கு எதிராக அட்டை விநியோகிக்கப்பட்டு, உள்வரும் பணப்பரிமாற்றங்கள் மூலமாக அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு அட்டையில் நிலுவைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே அவர் அட்டையைத் தொடர்ந்தும் தன்வசம் வைத்திருந்து உபயோகிக்க முடியும்.

33.5. 2017 ஆம் ஆண்டு அந்நியச் செலாவணி சட்ட மூலம் 12 இன் சரத்து 9(1) மற்றும் 9(2), 2017 ஆம் ஆண்டு பணிப்புரை இலக்கம் 2 மற்றும் 2017 நவம்பர் 17 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானி 2045/56 ஆகியவற்றிற்கு அமைவாக இலங்கையிலுள்ள நபர் ஒருவர் இலங்கைக்கு வெளியிலுள்ள ஒருவருக்கு வெளிநாட்டு நாணயத்தில்

கொடுப்பனவுகளை மேற்கொள்வது பின்வரும் நிலைமைகளின் போது மாத்திரமே அனுமதிக்கப்படுகின்றது;

(i) வர்த்தக நோக்கங்களுக்காக இலங்கைக்கு பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கொடுப்பனவிற்கு உபயோகிப்பது தவிர்ந்த இயற்கையில் தனிப்பட்ட தேவைகளுக்கான கொடுக்கல்வாங்கல்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு வெளியில் உள்ள நபருக்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுப்பனவு

(ii) வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு ஒன்றுக்கு எதிராக இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டை விநியோகிக்கப்பட்டு, இலங்கைக்கு வெளியில் உள்ள நபருக்கு மேற்கொள்ளும் எந்தவொரு கொடுப்பனவு

(iii) இராஜதந்திர வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது உள்வரும் முதலீட்டுக் கணக்கு ஆகியவற்றுக்கு எதிராக விநியோகிக்கப்படும் கடனட்டையை உபயோகித்து எந்தவொரு தேவைக்கும் இலங்கைக்கு வெளியில் வசிக்கும் ஒரு நபருக்கு மேற்கொள்ளும் எந்தவொரு கொடுப்பனவு

2. அட்டை வாடிக்கையாளர் இலங்கையை விட்டு புலம் பெயர்ந்தால் அல்லது வெளிநாட்டிற்கு வேலைவாய்ப்பு தேடிச் சென்றால் அத்தகைய நபருக்கு விநியோகிக்கப்பட்டுள்ள அட்டையை விநியோகித்த வங்கியிடம் அவர் அட்டையை மீள ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே கடன் மற்றும் டெபிட் அட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன. தனிநபர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வர்த்தக வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள வைப்புத் தொகைக்கு எதிராக அட்டை விநியோகிக்கப்பட்டு, உள்வரும் பணப்பரிமாற்றங்கள் மூலமாக அல்லது வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்து மாற்றம் செய்யப்பட்டு அட்டையில் நிலுவைக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே அதற்கு விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது.

3. டெபிட் அட்டையை உபயோகித்து வெளிநாட்டு நாணயத்தில் பணத்தை மீளப் பெறும் போதும், கடனட்டையை உபயோகித்து முற்பணமாக வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொள்ளும் போதும் 2017 ஆம் ஆண்டு அந்நிய செலாவணி சட்டமூலம் 12 இன் விதிமுறைகளின் கீழ் உள்ள ஒழுக்காற்று விதிமுறைகள் மற்றும் பணிப்புரைகளுக்கு அமைவாக அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளுக்கே அப்பணம் உபயோகிக்கப்படுகின்றது என்பதை நிரூபிப்பதற்கு தேவையான சான்றுகளை அட்டை வாடிக்கையாளர்கள் பேணுதல் வேண்டும்.

4. பின்வரும் நிபந்தனைகளின் கீழேயே கடனட்டைகள் விநியோகிக்கப்படுகின்றன;

(i) இராஜதந்திர கடவுச்சீட்டுக்களைக் கொண்டுள்ளவர்கள் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுள்ள இராஜதந்திர அடையாள அட்டைகளைக் கொண்டுள்ள வெளிநாட்டு பிரஜைகளுக்கு கடனட்டைகள் விநியோகிக்கப்படும்.

(ii) பிணை உத்தரவாதமாக இலங்கையில் வெளிநாட்டு நாணயக் கணக்கில் பேணப்படும் வைப்புத்தொகைக்கு எதிராக அதில் 90% தொகையை உச்ச வரம்பாகக் கொண்டே அத்தகைய அட்டைகள் விநியோகிக்கப்படுவதுடன், அத்தகைய அட்டைகள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செலவுகளுக்குமான கொடுப்பனவு வெளிநாட்டிலிருந்து உள்வரும் பணப்பரிமாற்றங்கள் மூலமாக அல்லது தனிநபரால் பேணப்படுகின்ற வெளிநாட்டு நாணயக் கணக்;கிலிருந்து பணப்பரிமாற்றங்கள் மூலமாகவே செலுத்தப்படல் வேண்டும்.

5. பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கம் தவிர வேறு எந்தவொரு நோக்கத்திற்கும் இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டையின் மூலமாக இலங்கைக்கு வெளியிலுள்ள நபர் ஒருவருக்கு எந்தவொரு கொடுப்பனவையும் மேற்கொள்ளும் போது அந்நிய செலாவணி திணைக்கள பணிப்பாளரின் எழுத்து மூலமான முற்கூட்டிய அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

6. அனைத்து இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டை வாடிக்கையாளர்களும் பிரகடனத்தை (இணைப்பு I இல் உள்ளவாறு) வழங்குதல் வேண்டும்.

7. இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டையானது அனுமதியற்ற தேவைகளுக்கு உபயோகிக்கப்படுகின்றது என வங்கி சந்தேகித்தால் அல்லது நியாயமான காரணங்கள் இருந்தால் இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டையை உபயோகித்து வெளிநாட்டு நாணய கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இடைநிறுத்தும் நடவடிக்கையை வங்கி உடனடியாக முன்னெடுக்கும்.

5. இந்த அறிவித்தல் நோக்கத்திற்காக பின்னணி இல்லையெனில் தேவைப்படுகின்றது;

(i) “அங்கீகரிக்கப்பட்ட முகவர்” அந்நியச் செலாவணி சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டிருப்பார்;

(ii) “இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டை” என்பது அந்நிய செலாவணி சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்டுள்ள முகவர்களால் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் விபரங்கள் இனங்காணப்படக்கூடிய வகையில் கடனட்டைகள், டெபிட் அட்டைகள் அல்லது சேமிக்கப்பட்ட பெறுமான அட்டைகள் ஆகியவற்றை உள்ளடக்கும் கடன், டெபிட் அல்லது ஏனைய வடிவத்தில் பெறுமானத்தை பணப்பரிமாற்றம் செய்வதற்காக பயனருக்கு இடமளிக்கின்ற ஒரு அட்டை அல்லது ஒரு சாதனம்;

(iii) “கடனட்டை” எனப்படுவது அட்டையைக் கொண்டுள்ளவருக்கு விநியோகிப்பவரால் வழங்கப்பட்டுள்ள ஒரு கடன் வசதியை உபயோகிக்கும் கொடுப்பனவு அட்டையாக உள்ளதுடன், உபயோகிகப்படும் கடன் வசதி குறிப்பிட்ட திகதியில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ செலுத்தப்பட முடியும். குறிப்பிட்ட திகதியில் செலுத்தப்பட்ட எத்தொகைக்கும் விநியோகிப்பவர் வட்டி மற்றும் ஏனைய கட்டணங்களை அறவிடுவார்.

(iv) “தனிப்பட்ட” என்பது அட்டை வாடிக்கையாளர் தனது வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் தேவைகளுக்கு உபயோகிப்பதை குறிப்பதுடன், வர்த்தக நோக்கங்கள் எதையும் உள்ளடக்கவில்லை.

எவ்விதமான விசாரணைகளுக்கும் எந்நேரமும் +94 117 640 640 என்ற இலக்கத்தினூடாக எமது வாடிக்கையாளர் சேவை மையத்தை தயவு செய்து அழையுங்கள்.